# அஞ்சலி

# ANJALI MAGAZINE

தீபம் - 05 சுடர் - 03 ஆவணி - மார்கழி - 2012



உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை - 17

# 'அஞ்சலி'

## உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

ஆசிரியர் : அருட்பணி சூ.டேமியன் அ.ம.தி M.A
துணை ஆசிரியர் : அருட்பணி இ.செ.விஜேந்திரன் அ.ம.தி
நிர்வாகக் குழு : அஞ்சலியக பணியாளர்கள், அஞ்சலி இளையோர் சமூகம்
ஆலோசனைக்குழு : அருட்பணி இ.ஸ்ரலின், M.Sc, அருட்பணி பிலிப் அ.ம.தி, மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் M.B.B.S, இ.து. குலசிங்கம், ஜோசப் பாலா.


## உள்ளே.....

பக்கம்


| | |
|---|---|
| ஆசிரியரின் மனதிலிருந்து | 01 |
| கற்றல் நடத்தையினை மேம்படுத்தும் ஊக்கமூட்டி நுட்பங்கள் | 02 |
| சிறுவர் ஆளுமை | 07 |
| இளங்குற்ற நடத்தை | 10 |
| இன்சொல் – சிறுகதை | 14 |
| அஞ்சலியகத்தில் சிறுவர் தினமும், பரிசளிப்பும் | 19 |
| சிறுவர்கள் வளமுடன் வளர | 20 |
| தற்கொலையில் இருந்து மீண்டெழல் | 23 |
| கவிதைத்தொகுப்பு | 25 |
| சிறுவர்கள் புதுஉலகம் படைக்க | 27 |
| இளமை இனிமை | 32 |
| பாவ இருள் அகற்றும் ஒளி | 33 |
| சிறுவர்களே மலரும் மொட்டுக்கள் | 35 |
| ஒற்றுமையே பலம் | 36 |
| கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளின் குணநலன்களும் காரணங்களும் | 37 |
| சிரிப்புடன் | 42 |
| திருச்சபையும் அதில் நமது பங்கும் | 43 |
| வலுவும், வாழ்வும் இழந்தோருக்கு ஒளியேற்றுவோம் | 44 |
| மகிழ்ச்சிக்கான வழி | 45 |
| அறிந்து கொள்ளுங்கள் | 46 |
| வாசகர் பார்வை | 47 |




'ANJALI' Magazine,
Nellandai Road,
Thumpalai, Point Pedro,
Jaffna, Sri Lanka. Tel:
021 3217262


விலை 40/=


'அஞ்சலி' சஞ்சிகை,
நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே: 021 3217262

# ஆசிரியரின் மனத்திலிருந்து....



## அனுபவ ஆளுமை

மனிதத்துவம் மதிக்காமல் மிதிக்கப்படும் இன்றைய எமது நாட்டில், சமுதாயத்தில், குடும்பத்தில், பிள்ளை வளர்ப்பு என்பது சிலருக்கு சுகமாகவும் இன்னும் சிலருக்கு சுமையாகவும் மாறிவிட்டது.

அனுபவம் என்பது ஒரு குழந்தை பிறந்தது முதல் தனது வளர்ச்சிக் கட்டங்களின் ஊடாக வளர்ச்சி அடைவதைக் குறிக்கும். இந்த அனுபவங்கள் நேரானவையாகவும் இருக்கலாம் எதிர் மறையானவையாகவும் இருக்கலாம். ஒருவர் எப்போதும் ஒரே மாதிரி உணர்தல், சிந்தித்தல், செயற்படல், இது ஒரு மனிதனை தனித்துவமாக்கின்றது.

தனி நபரின் தனித்தன்மை, தனிமனித வாழ்வு, தனிமனித சிறப்பியல்பு, தனிமனித பண்பியல் என்பன ஆளுமையாகும். அதாவது ஆளும் தன்மை ஆகும். எனவே வாழ்க்கையில் என்னென்ன அனுபங்களைப் பெறுகின்றோம் என்பவற்றின் விளைவே ஆளுமையாகும். ஆகவே அனுபவத்தின் மூலம் பெறப்படும் ஆளுமை தனித்துவமானது.

நானே ஒரு அனுபவமாக இருக்கின்ற போது கடந்த காலத்தில் என்னுடைய உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனைகள், சொற்கள், நடத்தைகள் எனது கடந்த கால நிகழ்வுகளுக்கு நான் பதில் கொடுக்கவேண்டும். நான் எப்படிப் பதில் கொடுத்தேன் என்பதில் தான் தங்கியிருக்கின்றது. என்னுடைய பதில் நேர்மறையாகவும் இருக்கலாம் எதிர்மறையாகவும் இருக்கலாம்.

எதுவே என் அனுபவம் அவை நேர்மறையயாக இருக்கின்றபோது வளர்ச்சியின் அனுபவங்களாகவும் எதிர்மறையாக இருக்கின்றபோது தேய்வின் அனுபவங்களாகவும் மாறுகின்றன. மனிதனுடைய சுயம் வளர்ச்சியை நோக்கியே பயணிக்க விரும்பும். மனிதன் தேய்வின் அனுபவங்களைத் தவிர்த்து வளர்ச்சியின் அனுபவங்க்ளை வளர்க்கின்ற போது மனிதன் முழு ஆளுமையை நோக்கிப் பயணிக்கின்றான்.

எமது அனுபவம் கற்றுத் தரும் பாடம் என்ன? ஒவ்வொரு அனுபவத்தையும் நாம் ஒரு பாடமாகவோ அல்லது எமது ஆசானாக எடுத்து அன்றாடம் பயன்படுத்தினோம் என்றால் மனிதனுடைய ஆளுமை வளர்ச்சி முழு நிறைவை அடையும். அனுபவத்திலிருந்து மனிதன் தன் ஆளுமையை வளர்க்கவில்லை என்றால் அவன் ஆளுமை அற்றவனாகவே இருப்பான். அனுபவம் கற்றுக் கொடுத்தவற்றை பயன்படுத்தவில்லை என்றால் அவன் பெறுகின்ற அனுபவம் பொருளற்றது.

-அருட்பணி இ.செ.விஜேந்திரன்-

JAFFNA

# கற்றல் நடத்தையினை மேம்படுத்தும் ஊக்கமூட்டி நுட்பங்கள்.



மேனகா சிவகரன் B.A.Psy.
விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

கல்விக்குப் பெயர் போன யாழ்ப்பாணம் இன்று அதன் கற்றல் அடைவுகள் முன்னைய காலங்களினை விட வீழ்சசியடைந் திருப்பதாகவே அனேக புள்ளிவிபரங்களும் சுட்டி நிற்கின்றன. ஏன் இந்த நிலைமை? பல்வேறுபட்ட காரணிகளும் இந்நிலைமைக்குச் செல்வாக்குச் செலுத்தியிருந்தாலும் மாணவர்களின் கற்றல் நடத்ததை அக் காரணிகளினால் மாற்றமடைந்துள்ளது என்பது தான் உண்மை. ஆகவே இங்குள்ள மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம்படுத்த நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இதற்கு ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் பங்களிப்பு மிக இன்றியமையாதது. எனவே மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம்படுத்த சிறந்த வழி மாணவர்களை கற்றல் செயற்பாட்டினை நோக்கி ஊக்கிவிப்பதேயாகும்.

மனிதநடத்தைக்குக் காரணமாக உள்ள உள்ளார்ந்த ஏதுக்களினை ஊக்கி என்று கொள்ளுகின்றனர். இது இலக்கு அல்லது தேவையை நோக்கிய உந்தப்பட்ட நிலை. அதாவது இலக்கு அல்லது தேவையினை நோக்கிச் செயற்பட சக்தி பெறப்பட்ட நிலை. இவ்வாறாக கற்றல் நடத்ததையினை மேம்படுத்த நாம் சக்தியினை வழங்குவோம் எனில் எமது மாணவர்கள் தாங்களாகவே கற்றலில் ஆர்வம் கொண்டு சிறந்த அடைவுகளினைப் பெறுவர் என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை. எனவே மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம்படுத்தும் ஊக்கமூட்டி நுட்பங்கள் தொடர்பாக இப்பகுதியில் நோக்கலாம்.

> மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம் படுத்த சிறந்த வழி மாண வர்களை கற்றல் செயற் பாட்டினை நோக்கி ஊக்கி விப்பதேயாகும். மனித நடத்தைக்குக் காரண மாக உள்ள உள்ளார்ந்த ஏதுக்களினை ஊக்கி என்று கொள்ளுகின்றனர்.

ஊக்கி என்பது மனித நடத்தைக்குக் காரணமாக உள்ள ஏதுக்கள் என்று நாம் ஏற்கனவே பார்த்திருந்தோம். ஊக்கமூட்டி நுட்பங்கள் என்பது அவ் அம்சங்களினை சக்தி மயப்படுத்த மேற்கொள்ளப்படும் வழிவகைகள் ஆகும். கற்றல் என்பது அறிவு, திறன், மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்துவது. எனவே இத்தகைய மாற்றங்களினை மாணவர்களில் ஏற்படுத்தி மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம்படுத்த பின்வரும் ஊக்கமூட்டி நுட்பங்களினைப் பயன்படுத்தலாம். இவற்றினை விரிவாக நோக்குவோம்.

**1. மாணவர்களுக்கு கற்றல் சார்பான விடயங்களினை யதார்த்த பூர்வமாக வழங்கல்.**

மாணவர்களிற்கு வழங்கப்படும் கற்றல் விடயங்கள் அவர்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாக தொடர்புபடுத்தி வழங்கப்பட வேண்டும். அது மட்டுமின்றி மாணவர்களின் சமூக கலாச்சாரங்கள், சமூக விழுமியங்களுடன் தொடர்புபடுத்தி அவ்விடயங்களினைப் பிரயோகிக்க வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும். (Brozo 2005)

கற்றல் விடயங்களினைத் தெளிவுபடுத்தும் கற்பித்தல் நுட்பங்களும் மாணவர்களிற்கு ஆர்வம் தரும் வகையில் யதார்த்தமாக இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் மிக அதிகமாகத் திகழும் தொழில் நுட்பங்களினைப் பயன்படுத்தி அந்நுட்பங்கள் அமைந்தால் மேலும் சிறப்புக்குரியது. (You tupe videos, cell phone.....etc)

**2. கற்றல் விடயங்களில் மாணவர்கள் தாங்கள் விரும்பியவற்றினைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கல்.**

மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகள் தமது கட்டுப் பாட்டுக்குள் உள்ள போது அதாவது தாமாகவே தெரிவு செய்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போது அதிகமாகக் கற்க உந்துகின்றனர். எனவே மாணவர்களின் பாடத் தெரிவுக்கு வெவ்வேறுபட்ட தெரிவு அம்சங்களினை கொடுத்து மாணவனாகவே தெரிவு செய்யுமாறு விட்டு விட வேண்டும். மாணவன் தன்னால் தெரிவு செய்யும் பாடங்களில் ஆர்வமுடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடுவான். மாணவர்களின் பாடங்களுக்கு மட்டுமின்றி சில மதிப்பீட்டுச் செயன்முறைகளினைக் கூட விரும்பியவற்றினுள் ஒன்றினைத் தெரிவுசெய்யமாறு வழங்க வேண்டும். (Reeve and Hyungshim, 2006).

**3. மாணவர்கள் தாம் விரும்பிய கற்றல் நடத்தையினை மேம்படுத்த உதவும் மாதிரிகளினை பின்பற்றத் தூண்டல்.**

சமூகக் கற்றல் கொள்கையின் பிரகாரம் கற்றலானது பின்பற்றலினால் நடைபெறுகின்றது. எனவே மாணவர்கள் தமக்கு விரும்பிய மாதிரிகளினை அடையாளம் கண்டு அவற்றினைப் பின்பற்றுகின்ற போது கற்றல் நடத்தை ஊக்குவிக்கப்படலாம். ஆனால் மாணவர்கள் தமக்கான மாதிரிகளினைப் தெரிவு செய்கின்ற போது பெற்றோர்கள், ஆசிரியர்கள் அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும். கல்வியில் சிறந்து விளங்குவதுடன் நற்பண்புகள் நிறைந்த மாதிரியினை மாணவர்கள் தெரிவு செய்யத்தூண்டுகின்ற போது சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ளலாம். Weins et al 2003, இவர்களின் ஆய்வு பெண் மாணவர்கள் பெரும்பாலும் தமது ஆசிரியர்களினை மாதிரிகளாகக் கொள்ள முற்படுகின்றார்கள் என்று கூறுகின்றது. எனவே ஆசியர்கள் சிறப்பான பண்புக் கூறுகள் உள்ளவராகவும் ஆற்றல் உள்ளவராகவும் திகழ வேண்டும்.

இவ்வாறாக மாணவர்களினால் தெரிவு செய்யப்படுகின்ற மாதிரிகள் இவர்களது சக பாடிகளாக இருக்கும் போது அவையும் ஓர் மாணவனின் கற்றல் நடத்தையினைத் தூண்டும் என ஆய்வுகள் கூறுகின்றன. (Margoils and Mccabe, 2006).

**4. வெகுமதிகள் வழங்கல்**

மாணவர்கள் கற்றல் தொடர்பான நடத்தையில் நேரான தன்மையினைக் காட்டுகின்ற போது இவர்களிற்குக் கொடுக்கப்படுகின்ற வெகுமதிகள் அதாவது பரிசுகள், பாராட்டு, புகழ் என்பன அவர்களின் கற்றல் நடத்தையினை மேலும் மேம்படுத்த ஓர் சக்தி வாய்ந்த ஊக்கியாகத் தொழிற்படுகின்றது. பரிசளிப்பு விழா நடாத்துதல், பலர்

> இவர்களிற்குக் கொடுக்கப்படுகின்ற வெகுமதிகள் அதாவது பரிசுகள், பாராட்டு, புகழ் என்பன அவர்களின் கற்றல் நடத்தையினை மேலும் மேம்படுத்த ஓர் சக்தி வாய்ந்த ஊக்கியாகத் தொழிற்படுகின்றது.

முன்னிலையில் மாணவரினைப் பாராட்டுதல், மாணவர்கள் கற்றல் சார்பான விடயங்களில் ஆர்வமாய் உள்ள போது தட்டிக்கொடுத்தல், கேட்கப்படும் வினாக்களிற்கு விடையளிக்கப்படும் மாணவனை "கெட்டிக்காரன்" என்ற வார்த்தைப் பிரயோகம் மூலம் பாராட்டுதல், கேடயம் வழங்கல், சான்றிதழ் வழங்கல், பதக்கம் வழங்கல் என்பன சிறந்த வெகுமதிகளாகக் கொள்ளப்படுகின்றன. இவை காலந்தாழ்த்தாது நியம முறையில் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாணவரின் அடைவின்பின் காலந் தாழ்த்தி வழங்கப்படும் வெகுமதிகளினால் எந்தவித பயனும் கிட்டுவதில்லை என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**5. வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவர்களினைப் பங்குபெறச் செய்தல்.**

மாணவர்களிடம் சிறிய சிறிய பொறுப்புக்களினைக் கொடுத்து அவற்றினை நிறைவேற்றச் செய்வதுடன் புதிய விடயங்களினைப் புகுத்துகின்ற போது அவை தொடர்பாக மாணவர்களிடம் கலந்துரையாட வேண்டும். குழுச் செயற்பாடாகவோ அல்லது தனித்த முறையிலோ மாணவர்கள் கற்றுக் கொண்ட விடயங்களினை பிரயோகிக்கச் சந்தர்ப்பம் வழங்குகின்ற போது அவர்களின் கற்றல் நடத்தை உயர்கின்றது.

**6. மாணவர்களின் தேவைகளினைப் பூர்த்தி செய்தல்.**

மாணவர்களினை சந்தோசமாகவும் ஆர்வமாகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்த அவர்களின் தேவையினைப் பூர்த்தி செய்தலானது மிக முக்கியமான உந்துசக்தியாகும். மாணவர்களின் தனிப்பட்ட வாழ்வில், வகுப்பறையில் பல்வேறுபட்ட தேவைகள் காணப்படுகின்றன. இவற்றினை இனங்கண்டு தீர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மாணவர்களிடம் பொதுவாக அன்புக்கான தேவை, உயிர்வாழ்வதற்கான தேவை, நகைச்சுவைக்கான தேவை, பாராட்டல் தேவை போன்ற அடிப்படையான தேவைகள் காணப்படலாம். இவற்றினைச் சரியான முறையில் திருப்தி செய்வதன் மூலம் மாணவர்களைக் கற்றலில் முழுமையாக ஈடுபடச் செய்யலாம்.

**7. ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளினை கவர்ச்சிகரமானதாக்குதல்.**

ஆசிரியர்கள் மாணவர்களின் கற்பித்தல் விடயங்களினை ஏற்கனவே திட்டமிட்டு மாணவர்களின் அடிப்படை அறிவினை இனம் கண்டு அவற்றிலிருந்து புதிதாக கற்பிக்கும் விடயங்களினை திட்டமிட வேண்டும். முறையான பாடத் திட்டமிடல் மாணவர்களினை ஈர்க்கப் பயன்படும். புதிய பாடங்களினை அறிமுகப்படுத்துகின்ற போது மாணவர்களிற்கு அவற்றின் நோக்கம், அதனைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாகத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். எல்லா மாணவர்களையும் சமமாக மதித்து நடாத்த வேண்டும். ஆசிரியர் சிறந்த நற்பண்பு உடையவராகவும், அன்பானவராகவும், சிறந்த கற்பித்தல் திறன் உடையவராகவும், மாணவர்களினைத் தட்டிக் கொடுப்பவராகவும், மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளினைக் கவனத்தில் எடுப்பவராகவும் உள்ள போது மாணவர்கள் குறித்த ஆசிரியரினால் ஈர்க்கப்படுவார். கற்றல் செயற்பாடுகளிலும் ஆர்வமாகப் பங்குகொள்வார்கள்.

**8. கற்றல் சூழலினை சௌகரியமானதாக்குதல்.**


மாணவர்களின் கற்றல் சூழலினை அவர்களின் மனதிற்குப் பிடித்தமானதாகவும், ரம்மியமானதாகவும், சௌகரியமானதாகவும், போதிய வளம் கொண்டதாகவும், எதுவித இடையூறுகள் அற்றதாகவும் அமைத்துக் கொள்ளுகின்ற போது இவர்களது கற்றல் நடத்தை உயரும்.

எனவே இவ்வாறான ஊக்கமூட்டி நுட்பங்களினை பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பயன்படுத்துகின்ற போது தனிப்பட்ட கற்றல் அடைவுகளினை மேம்படுத்தக் கூடியதாக உள்ளதுடன் யாழ்ப்பாணத்தின் கற்றல் அடைவுகளினையும் எதிர்வரும் காலங்களில் உயர்த்த முடியம் என்பது திண்ணம்.

**Reference**

www.virtualsalt.com/motive.htm

serc.carleton edu/NAGT workshop/effective/motivation.html.



# சிறுவர் ஆளுமை

ஆளுமையின் முக்கிய கட்டம் தாயின் கர்ப்பகாலம் தொடக்கம் முதல் ஏழு வருடங்களாகும் என்பது உளவியல் மனநல மருத்துவத்துறையினரின் கூற்றாகும். இக்கால கட்டத்தில் பெற்ற வடுக்கள் வாழ்க்கை முழுவதும் நிலைத்துவிடும். குழந்தையின் ஆளுமையைப் பொறுத்தவரை பெற்றோர், சகோதரர், அயலவர், சூழல், பாடசாலை என்பன முக்கிய பங்கு எடுக்கின்றன. ஆளுமை எனும் போது எம்மில் பலர் உடற்கவர்ச்சியை மட்டும் கருத்தில் கொள்கின்றனர். இது முற்றிலும் தவறானதாகும். ஒருவரின் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, சமூகவாழ்வு, ஆன்மீக வாழ்வில் அவர் காட்டும் விருத்தி இவைகளின் ஒன்றித்த நிலைப்பாடே ஆளுமையைத் தீர்மானிக்கின்றது.

குழந்தை வாழும் சமூக அமைப்பும் அதன் ஆளுமை வளர்ச்சிக்கு உரமாக அமைய வேண்டும். மனிதம், அன்பற்ற சமூக அமைப்பும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றன. முதலில் பிள்ளை வாழும் குடும்பம் சீரானதாக அமைய வேண்டும். கனல் தெறிக்கும் முகம், இடிமுழக்கம் போன்ற குரல், மின்னல் போன்ற அடிகள், இவைகள் குழந்தைகளின் உளநலத்தைப் பாதிப்பனவாக அமைகின்றன. கடுமையும் கண்டிப்பும் நிறைந்த பெற்றோர் தம் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சிக்குப் பெரும் தடைக்கற்களாக அமைகின்றனர். குழந்தைகளின் செயற்பாடுகளை மட்டம் தட்டிப்பேசுதல், மற்றக்குழந்தைகளுடன் ஒப்பிட்டுப்பேசுதல், குறைத்து மதிப்பிடல் என்பன தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாக்குகின்றன. மாறாகத் தட்டிக்கொடுத்தல், உன்னால் முடியும் எனும் உணர்வையூட்டல், அன்புடன் கண்டித்தல் என்பன ஊக்கத்தை அளிக்கும் விற்றமின்களாகும். சிறு குழந்தையாக இருக்கும் போதே பொருட்களைச் சிதறும் போது அல்லது ஆடைகளை நனைக்கும் போது அன்பாகக்கூறிக்கண்டித்தால் பிள்ளைக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது.

குழந்தைகள் ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல. எத்தனையோ திறன்கள் அவர்களிடம் மலர இருக்கும் மொட்டுகளாக இருக்கின்றன. அவை கருகவிடாது காப்பது பெற்றோரின் கடமையாகும்.

ஆளுமை வளர்ச்சிக்கு எதிரான செயற்பாடு தாழ்வு மனப்பான்மையாகும். சிறுவயதில் பெற்றோரும், சகோதரர், அயலவர், பாடசாலையும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவ வேண்டும். சிறு பராயத்தில் இதை வளர்க்கத்தவறும் போது வளர்ந்தபின் என் பெறுமதி மிகக்குறைவு, என்னால் சமுகத்திற்கு, பெற்றோருக்கு என்ன பயன் என ஒடுங்கிப் போகின்றனர். இதனால் பதட்டமும், குற்ற உணர்வும், பிறரில்தங்கி இருக்கும் தன்மையும், உடல் உளநலக் குறைபாடும் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பெற்றோர், ஆசிரியர், சகோதரரின் கடுமையான கண்டிப்புகளும், கடும் தண்டனைகளும் குழந்தைகளின் பிறழ்வான நடத்தைகளுக்குக் காலாக அமைகின்றன. இதனால் அவன் மதிப்பிழக்கும் தருணங்களில் அவனது ஆளுமை வளர்ச்சி பாதிப்படைகின்றது. குறுணிக்கல் சப்பாத்தில் நுழைந்து நடக்கும் போதுவேதனை அளிப்பது போல இச்செயற்பாடுகள் மனதைக் குத்தும் தன்மை வாய்ந்தவை. குற்ற உணர்வுகளும் தோன்றக்காலாய் அமைகின்றன.

மறுபுறம் தேவையற்ற அச்சவுணர்வுகள் வளர்க்கப்படும் போது ஆளுமை விருத்தி பாதிக்கப்படுகின்றது. சிறிய வயதில் பயமுறுத்தல், வெருட்டுதல், சுயமாகச் செயற்படவிடாமை இவை போன்றனவும் குழந்தைகளின் சவாலாக அமைகின்றன. இதன் தாக்கம் வளர்ந்த பின்பும் இவர்களைப் பாதிப்பதை உணரலாம். எதைக்கண்டாலும் பயம், தன்னம்பிக்கையின்மை உள்ளவராக இவர்கள் காணப்படுவர்.

குழந்தைகளின் ஆளுமையில் சிந்தனைகள் (Thoughts) உணர்வுகள்( feelings) நடத்தைகள் (Behavior) என்பன முக்கியமானவை. இவை சரியானமுறையில் வளர்த்தெடுக்கப்படல் அவசியமாகும் பெற்றோரினதும், பாடசாலையினதும் பங்களிப்பு இதில் முக்கியமானதாகும். இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர் புடையவை. நல்ல கதைகள், நல்லறிவுரைகள், நல்லபொழுது போக்குகள் இவற்றை வளர்க்க உதவும்.

முக்கியமாகக் குழந்தைகள் மதிக்கப் படவேண்டியவர்கள். அவர்களின் சிந்தனைகளையும், உணர்வுகளையும் நாம் மதிக்க வேண்டும். செவிமடுக்க வேண்டும். உனக்கு ஒன்றும் தெரியாது

> உனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறுவதை விட உன்னால் முடியும் என நம்பிக்கையூட்டுவது சாலச் சிறந்தது.

என்று கூறுவதை விட உன்னால் முடியும் என நம்பிக்கையூட்டுவது சாலச் சிறந்தது. அவர்களின் திறன்களை இனம் கண்டு வளர்க்க வேண்டும். நல்ல உணர்வும் நல்ல பேச்சும், நல்ல செய்திகளும், உடலையும் உள்ளத்தையும் வளர்க்கக்கூடியவை. குழந்தை நல்லவனாவதும் வல்லவனாவதும் வளர்ப்பிலும், கவனிப்பிலும் தங்கியுள்ளது. இதை அளிப்பவர் பெற்றோரும் சமூகமும் பாடசாலைகளும் எனின் மிகையாகாது.

**திருமதி.பி.எவ்.சின்னத்துரை**
ஓய்வுநிலை அதிபர்

# நட்சத்திரம்

வானத்திலே கோலப் புள்ளிபோல்
வடிவங்கொண்டு காட்சியளிக்கிறாய்
உனது அழகினை நான்
எவ்வாறு சொல்வேன்.

கண்ணிற்கு இமை அழகு
பரந்து விரிந்த வானுக்கு நீ அழகு
இமையைப் போலவே நீயும்
கண்சிமிட்டியே காட்சி தருகிறாய்.

உன்னைக் காணவே
இரவு வரும் வரை காத்திருப்பேன்
உன்னை உற்று நோக்கினால் – என்
உள்ளக் கவலைகள் தீர்ந்து விடும்

நட்சத்திரமே உன் அருகில் வர
என் உள்ளம் ஏங்குகின்றது – உன்
புன்னகை எனும் பொக்கிஷத்தால்
என் மனதைக் கவர்ந்து கொண்டாய்.

**வ. துஷாளினி**
அஞ்சலியகம்.



# இளங்குற்ற நடத்தை (Delinquency)

உலகளாவிய ரீதியில் இளம் பிள்ளைகள் குற்றம் செய்வது மிகுதியாகி வருகின்றது. குமரப்பருவத்துப் பிள்ளைகளே பெருவாரியான முறையில் குற்றங்களை செய்கின்றனர். அதிலும் குறிப்பாக 12 இல் இருந்து 16 வயது வரையான பிள்ளைகளே அதிகமாக குற்றங்களை புரிவதாக புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது. எனினும் உலகளாவிய சட்ட விதிகளின் படி 18 வயதுக்கு குறைந்தவர்கள் குற்றம் புரியும் போது அவர்களை இளம் குற்றவாளிகள் என வரையறுக்கின்றனர். அவர்களை வயது வந்த குற்றவாளிகளைப் போல சிறைச்சாலைக்கு அனுப்பாது எதிர்கால நலன் கருதி சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்புகிறது. ஆகக் கூடிய சீர்திருத்த காலம் மூன்று வருடங்கள் ஆகும். சீர்திருத்தப் பள்ளியில் பொதுக்கல்வி மற்றும் தொழிற் கல்வி என்பன வழங்கப்படுகிறது. இச் சீர்திருத்த காலத்தில் அவர்களது நன்நடத்தை அவதானிக்கப்படும். அக் காலத்துக்குள் வேறு குற்றங்கள் செய்தால் சீர்திருத்த காலம் மேலும் நீடிக்கப்படும். சீர்திருத்தப் பள்ளிக்கு விடுவது குற்றத்தை மன்னிப்பதற்காக அல்ல. மாறாகத் தண்டனையை ஒப்பந்த அடிப்படையில் நிறுத்தி வைப்பது ஆகும். தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதன் நோக்கம் குற்றவாளி தன் வாழ்க்கையை புனரமைத்து கொள்வதற்கே ஆகும். அவதானிக்கப்படும் நன்நடத்தைக்கு ஏற்ப இளம் குற்றவாளிகள் மீண்டும் குடும்பத்துடனோ சமூகத்துடனோ இணைந்து கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கும்.

### இளம் குற்றச்செயல்களின் வகைகள்

* திருடுதல்
* திருடுவதில் பிறருக்கு உதவி செய்தல்
* மது அருந்துதல், புகைத்தல் , போதைப்பொருள் பாவனை
* சூதாட்டம்
* பள்ளிக்கள்ளம்
* வீட்டை விட்டு ஓடுதல்
* விடுதியை விட்டு ஓடுதல்
* சண்டையிடல், வெட்டுதல் , குத்துதல்

* கொலை செய்தல்
* ஊர் சுற்றுதல்
* பிச்சை எடுத்தல்
* போராட்ட குழுவில் இணைதல்
* பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்
* ஆபாசப்படம் பார்த்தல்
* பெண்களிடம் பலவந்தமாக நடத்தல்
* பாலியல் விவாக நடத்தைகள்

ஆரம்ப காலத்தில் ஒருவர் குற்றம் செய்யும் போது அதனால் பாதிக்கப்பட்டவர்களின் நலனில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டது. இதனால் தவறு இழைத்தவர்கள் அனைவருக்கும் குற்றவாளிஎனக்கூறி தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் உளவியல், சமூகவியல் துறைகளின் வளர்ச்சி காரணமாக ஒருவர் குற்றம் இழைக்கும் போது அக்குற்றத்துக்கான முழு பொறுப்பையும் அந்நபர் மீது சுமத்த முடியாது எனவும், அக் குற்றத்தை செய்ய தூண்டிய மனநிலை பற்றியும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. இதன் அடிப்படையில் தோன்றிய கருத்தியலே "குற்றமனம் - Guilty mind" என்பதாகும்.

குற்ற மனதுடன் கூடிய செயலையே குற்றம் என சட்டம் கருது கிறது. குற்ற மனமின்றி செய்யப்பட்ட செயலால் பிறருக்கு தீங்கு விளைந் தாலும் அதை குற்ற செயலாக சட்டம் கொள்வதில்லை.

குற்றம் எனக் கருதுவதற்கு முன் அச்செயல் குற்றம் மனதுடனும், பிறருக்குதுன்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற தீங்கெண்ணத்துடனும், செய்யப்பட்டதா என ஆராயப்பட வேண்டியது அவசியம் என கூறப்படுகிறது. குற்ற மனதுடன் கூடிய செயலையே குற்றம் என சட்டம் கருதுகிறது. குற்ற மனமின்றி செய்யப்பட்ட செயலால் பிறருக்கு தீங்கு விளைந்தாலும் அதை குற்ற செயலாக சட்டம் கொள்வதில்லை. பகை காரண மாக ஒருவர் மற்றவரின் கையை வெட்டினால், வெட்டியவனுக்கு தகுந்த தண்டனை அளிக்கப்படுகிறது. கையை வெட்டிச் சத்திரசிகிச்சை செய்யும் வைத்தியனுக்குத் தண்டனை

அளிக்கப்படுவதில்லை ஏனெனில் இங்கு முதல் செயல் குற்ற மனதுடன் செய்யப்பட்டது. அதாவது மனநிலை, சிந்தனையை கருத்தில் எடுக்கிறது. இரண்டாவது செயல் குற்ற மனம் இல்லாமல் செய்யப்பட்டது. அந்த வகையில் தான் 18 வயதுக்கு குறைந்தவர்கள் செய்யும் குற்றங்களையும் குற்ற மனம் இல்லாமல் செய்யப்பட்டதாக கருதி சிறையில் அடைக்காது சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். அந்த வகையில் இளங்குற்ற நடத்தையுடைய சிறுவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளில் இருந்து இளங்குற்ற நடத்தைகள் உருவாகுவதற்கான காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தி உள்ளனர்.

* உயிரியல் காரணங்கள்
* உடலியல் காரணங்கள்
* உளவியல் காரணங்கள்
* சமூக காரணங்கள்
* பொருளாதார காரணங்கள்

குழந்தைகள் சிலர் பிறக்கும் மரபுரிமை ரீதியாக குற்ற நடத்தைக்குரிய இயல்புகளுடன் பிறப்பினும் , பலரின் சூழ்நிலைக் காரணிகளே குற்ற நடத்தைகளுக்கு பின்னணியாக உள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதாவது வன்முறை குற்றவாளிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையினரில் XY என இருக்க வேண்டிய நிறமூர்த்த கட்டமைப்பு XYY என இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொடூரமான குற்றச்செயல்களில் ஈடுபடும் ஆண் குற்றவாளிகளில் மேலதிகமாக ஒரு Y நிறமூர்த்தம் காணப்படுகிறது. என PA Jocobas என்ற ஓமோன் ஒரு ஆணில் அதிகமாக சுரக்கப்பட்டாலும் மீச்செலவு , சமூக விரோத ஆளுமை அதிகமாக வெளிப்பட வாய்ப்புண்டு என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மேலும் கட்டிளமைப் பருவத்தினர் இடையே ஏற்படும் உணர்ச்சி கொந்தளிப்பு , சில உளநோய்கள், பெற்றோரின் புறக்கணிப்பு, அன்பு , ஆதரவு , இல்லாமல் வளரும் குழந்தைகள் , வறுமையான குடும்ப சூழல், மன அழுத்தங்கள், விடுதி வாழ்க்கை, காதல் தோல்விகள், தவறான சகபாடிக் குழுக்கள், வன்முறையான சமூக கலாசாரப் பின்னணி, தொடர்பு சாதனங்களின் தவறான பிரயோகம், சகபாடிகளின் புறக்கணிப்பு, தாழ்வு மனப்பான்மை, அறியாமை போன்ற பல காரணிகள் இளங்குற்ற நடத்தை உருவாக காரணங்களாக உள்ளன.

நாம் இளங்குற்றவாளிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்காது அவர்களையும் மனிதர்களாக நோக்குதல் வேண்டும். அவ்வாறு இல்லாது ஒரு முறை அறியாது தவறு செய்தவனை குற்றவாளி என முத்திரை குத்துதல், தவறான கண்ணோட்டத்தில் பார்த்தல் என்பன அவர்களின் குற்ற நடத்தைகளை மேலும் அதிகரிக்க காரணமாகலாம். இளங்குற்ற நடத்தை அதிகரிப்பதை தடுக்க புறக்கணிக்கப்பட்ட சிறுவர்கள், வீதியோரச் சிறுவர்கள், பாடசாலை இடை விலகும் சிறுவர்கள் என்பவர்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மேற்கூறப்பட்டவற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் இளங்குற்ற நடத்தை உருவாகுவதை குறைக்க முடியும்.

பாரிய குற்ற செயல்களை புரியும் குற்றவாளிகளின் கடந்த கால வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் சிறிய வயதில் செய்த சிறு குற்ற செயல்கள் சரியான முறையில் கையாழப்படாது உள்ளதே காரணமாக உள்ளது. எனவே சமூகத்தில் இளங்குற்ற நடத்தை உடைய வர்களை இனங்கண்டால் அவர்களை வழிப்படுத்த பெற்றோர், ஆசிரியர், சமூகவியலாளர், உளவியலாளர், சட்டத் துறையினர் போன்ற துறைசார் வல்லுனர்கள் முன்வர வேண்டும். அவ்வாறு இன்றி இன்றைய இளங்குற்ற நடத்தையுடைய சிறுவர்கள்சரியான முறையில் சீர்திருத்தப் படாது புறக்கணிக்கப்பட்டால் எதிர்கால சமுதாயம் குற்றவியல் நிறைந்த சமூகமாக மாறுவதை தடுக்க முடியாது போய்விடும் என்ற உண்மையை நாம் அனைவரும் புரிந்து செயற்பட வேண்டும்.

பாரிய குற்ற செயல்களை புரியும் குற்றவாளிகளின் கடந்த கால வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் சிறிய வயதில் செய்த சிறு குற்ற செயல்கள் சரியான முறையில் கையா ழப்படாது உள்ளதே காரண மாக உள்ளது.

**உசாத்துணை நூல்கள்:**

குமர உள்ளம், இளையோர் உளவியல் , சமூகவியல் ,
சமூகப் பொருண்மைகள் , சமூகப்பிரச்சினைகள்.

**K.றஜீவன்**
உளவியல் விஷேட பிரிவு,
யாழ்.பல்கலைக்கழகம்.

# இன்சொல்

*-சிறுகதை-*

பைசிக்கிளை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தான் பகலவன். கை நரம்புகள் புடைத்தெறித்துக் கொண்டிருந்தன. பைசிக்கிளின் கைப்பிடியை அழுத்திப்பிடித்துக் கொண்டிருந்தான். ரென்சன்... ரென்சன்...ரென்சன்.. எப்ப பார்த்தாலும் ரென்சனுடனே தான் காலத்தை ஓட்டுபவன். அது அவனுக்கே நன்றாகத் தெரியும். அவ்வாறிருந்தும் தனது கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லையே. வீட்டில் நடந்த சம்பவம் மீண்டும் மீண்டும் மனத்திரையில் காட்சிகளாக ஓடிக்கொண்டிருந்தன. மனைவி சந்தியா அன்பும் அடக்கமும் பணிவும் நிறைந்த ஒரு குடும்பப் பெண்.

ஆனாலும் பகலவன் எரிந்து விழும்போது எத்தனை நாட்கள் பொறுமை காக்கமுடியும்? இன்று பொறுமை கடந்துவிட்டதன் விளைவு சந்தியாவின் கன்னத்தில் பளாரென்ற அறை. அறைந்த கரத்தை ஒரு தடவை பார்த்துக்கொள்கிறான்.

“பாதையைப்பார்த்து போங்கய்யா” பாதசாரியின் சீற்றம் மிகுந்த வார்த்தைகளால் பாதையில் கவனம் செலுத்தினான். வினாடிகள் நிமிடங்களாக தான் வேலை பார்க்கும் நிறுவனத்திற்கு வந்து சேர்ந்துவிட்டான். நிறைந்த மோட்டார் சைக்கிளுக்கிடையில் தனது புஷ்பைக்கிளையும் நிறுத்திக் கொண்டான். இன்று எப்படியாவது ரென்மந்த்லோன் வழங்கும் அதிகாரியுடன் கதைத்து லோனைப்பெற வேண்டும் என்று மனதில் கணக்குப் போட்டவண்ணம் தனது சீற்றில் அமர்ந்துகொண்டான். நிறுவன உயர் அதிகாரி நோட்டம் விட்டவாறு வந்து கொண்டிருந்தார். எல்லோரும் தங்கள் தங்கள் கடமைகளில் மூழ்கிப்போயிருந்தார்கள். ஆயினும் நிறுவன உயர் அதிகாரியின் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது. அதிகாரியும் ஒரு ரென்சன் பாட்டி தான். எப்ப பார்த்தாலும் கரிச்சுக்கொண்டிருப்பார். பகலவன் தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

“என்ன பகலவன் நேற்று ஒப்படைத்த வேலை முடிந்துவிட்டதா? பத்து மணிக்கிடையில் ஒப்படைக்க வேண்டும். பிறகு சாட்டுப்போக்குச்

PUBLIC LIBRARY
JAFFNA



சொல்லக்கூடாது." சொல் அம்புகளை உரத்தே வீசினார். ஏனைய ஊழியர்கள் பகலவனை ஒரு மாதிரியாகப் பார்ப்பது நன்கு தெரிந்தது.

"நேற்றே முடித்து விட்டேன் சேர்" பவ்வியமாகக் கூறினான் பகலவன். அவசரப்பட்டு செய்திட்டு அங்கை இங்கை வெட்டிக் கொத்தக் கூடாது" மீண்டும் அதே தொனியில் சொல் அம்புகளால் குதறி எடுத்தார். "வாயைத்திறந்தாலே பிழையாக இருக்கிறதே! என்ன மனிசரப்பா இவர்கள்? வேலைகளை உரிய நேரத்திற்குள் முடிக்காமல் இழுத்தடிப் பவர்களை மதிப்பார்கள். மரியாதைப்படுத்துவார்கள். உடனடியாகச் செய்து முடிப்பவர்களுக்கு ஒரு பரிகாசம். இவரைப் போன்ற பலரைச் சந்தித்திருக்கிறான் பகலவன்.மனதிற்குள் குமுறியவன் மௌனமாக தனது கடமையில் புலன்களைச் செலுத்தினான். மணி பத்தைத்தாண்டிவிட்டது. உயர் அதிகாரி அவர் சீற்றில் இல்லை. உப அதிகாரியிடம் போய் நின்றான். "என்னப்பா ! பகலவன் எங்காவது வெளியில் செல்லவேண்டுமா?" அன்பொழுகக்கேட்டார். அவர் கேட்டவிதத்திலேயே உள்ளம் குளிர்ந்து போனான்.

"சேர், கெட்ஒவ்வீசுக்கு ஒருக்கால் போகவேணும். சேரையும் காணயில்லை. இந்த பைலையும் அவரிடம் ஒப்படைக்கவேணும்." வார்த்தைகளை நீட்டிய பகலவனின் கரங்களிலிருந்து பைல்களை வாங்கிப் பார்த்த அதிகாரி "இந்த வேலை அவசரமாக முடிக்க வேண்டியதில்லையே. பரவாயில்லை. நீர் குறுகிய காலக்கொப்பியிலை கையொப்பத்தை வைத்துவிட்டுப் போட்டு வாரும்." கூறிய அந்த அதிகாரிக்கு நன்றி தெரிவித்து விட்டு குறுகிய கால லீவுக்கொப்பியிலும் பதிந்துவிட்டு வெளியேறிய பகலவனின் மனதில் "இவரைப்போல் அல்லவா மனிதர்கள் இருக்க வேண்டும்." என்ற அங்கலாய்ப்புத் தொனித்தது. வெளியேறிய பகலவன் நேரே தலைமை அலுவலகத்திற்கு தனது பைசிக்கிளைச் செலுத்தினான். மீண்டும் அவனது நினைவுகள் வீட்டைச்சுற்றிச் சுற்றியே வந்தன.

பக்கத்து வீட்டுத்தம்பதிகளின் அந்நியோன்னியத்தையும் ஒற்றுமையையும் அன்பான பேச்சுவார்த்தை பற்றியும் அடிக்கடி மனைவி சந்தியா கூறும் வார்த்தை அவனுள் எதிராலிக்கிறது. "மனிதனென்றால் மனிதனுக்குரிய அத்தனை குணங்களும் இருக்கவேண்டும். அவன் தான் மனிதன். அதை விட்டிட்டு அந்தத்தெய்வப்பிறவிகளைப்பற்றிக் கதை

அளக்கிறீர்" என்று ஏதாவது கூறி தான் மடக்கும் விதத்தையும் எண்ணிக் கொண்டான்.

சந்து பொந்துகளையெல்லாம் கடந்து தலைமை அலுவலகத் திற்குள் காலடி எடுத்து வைத்தவன் மெது மெதுவாக லோனுக்குப் பொறுப்பான அதிகாரியை நெருங்கினான். "சேர், ரென்மந்த் லோன் விண்ணப்பம் தந்து மூன்று வருடமாகிறது" மென்று விழுங்கி கூறினான். "நிதி இன்னமும் வரயில்லை" முகத்தில எந்தவித ஈடாட்டமும் இல்லாமல் பதில் வந்தது. இரண்டு வருடமாக கிடைக்கும் பதிலும் முகபாவனையும் பகலவனின் மனதில் நன்கு பதிந்துவிட்டது. ஆனாலும் ஒரு நப்பாசையில் தான், இன்றும் புறப்பட்டான். வாழ்க்கையில் இந்த லோனே வேண்டாமப்பா. என்று முடிவு செய்யும் அளவிற்கு அந்தப்பெரிய மனிதரின் நடவடிக்கை அமைந்திருந்தது. முன் வைத்த காலை பின்வைக்க விரும்பாதவனாக வங்கியை நோக்கி பைசிக்கிளைச் செலுத்தினான். அங்கே லோனுக்குப்பொறுப்பான ஒரு லேடி இருந்தார். அருகில் சென்றவன். தனது நிலைமையை உணர்வு பூர்வமாக விளக்கினான். சில படிவங்களை பகலவனுக்கு முன் வைத்தார் அந்தப்பெண்மணி. "இவற்றைச்சரியாக நிரப்பி ஒப்படையுங்கள் கூறியவர் தனது வேலையில் கவனம் செலுத்தலானார். சில படிவங்களைப் பூர்த்தி செய்தான் பகலவன். சில விடயங்கள் சந்தேகமாக இருந்தது.

"மிஸ் இந்த இடத்தை எவ்வாறு நிரப்புவது? முன் கோபியானாலும் காரியம் ஆகவேண்டுமானால் இறங்கித்தானே ஆகவேண்டும். தன்னடக்கத்துடன் வினவினான் பகலவன். அதற்கு அந்த லேடி சரியான விபரத்தைக்கூற நிரப்பிக்கொண்டான். மீண்டும் சில இடங்கள் நிரப்பத்தயக்கமாக இருந்தது. படிவங்கள் வீணாகிவிடுமே என்ற நல்ல நோக்கத்தில் "மிஸ்.." என்று இழுத்தான்.

"உந்தப்படிவங்களை நிரப்பமுடியாவிட்டால் நீங்கள் வேலை பார்த்து என்ன கிழிக்கப்போகிறீர்கள்"

அந்த லேடியின் உதடுகளில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகச் சுட்டது போல் வார்த்தைகள் வெளிவந்தன. சுற்றுமுற்றும் பார்த்தான். அவரவர் தங்கள் தங்கள் வேலைகளில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள். செத்துப்பிழைத்தது போல் எழுந்து கொண்டான்.

"மிஸ்டர் கொஞ்ச நேரம் இருங்க" இந்த வேலையை முடிச்சிட்டு வாறன்" மீண்டும் அந்த லேடியின் குரல் சினத்துடன் ஒலித்தது. "வேண்டாம் தாயே ஆளைவிடு." என்று கையெடுத்துக் கும்பிடவேண்டும் போலிருந்தது. ஆனாலும் புண்ணுக்கு விஷமா? மருந்துக்கு விஷமா?

"பரவாயில்லை. நான் நிரப்பிக்கொண்டு வருகிறேன். கூறியவன் எழுந்து கொண்டான். இவற்றையெல்லாம் அவதானித்துக்கொண்டிருந்த பியோன் வங்கியை விட்டு வெளியேற எத்தனித்தவனைப் பின் தொடர்ந்து அவனை இன்னோர் லேடிக்கருகே அழைத்துச் சென்றான். "உட்காருங்கள்"முன்னால் இருந்த ஆசனத்தில் பகலவனை அமரச்செய்துவிட்டு படிவங்களை வாங்கி விபரங்களைக் கேட்டுப் பூரணப்படுத்தினார். மனிதர்களுக்கிடையே தான் எவ்வளவு வேறுபாடு. பகலவனின் உடம்பெல்லாம் புல்லரித்தது. இவ்வாறும் ஆபிசில் சந்தித்த உபஅதிகாரியின் பெருமனது. இப்போது இந்த லேடியின் பெருமனது பகலவனும் ஒரு முன்கோபி தான். எதற்கெடுத்தாலும் சுள்ளென்று விழுபவன் அது அவனுக்கு அப்போது விளங்கவில்லை மற்றவர்கள் சீறிப்பாயும் போது தானே விளங்குகிறது. இவ்வாறு தானே தானும் பாய்ந்து எரிந்து விழும்போது மற்றையவர்கள் அனுபவித்திருப்பார்கள். மனிதர்களுடைய சுபாவம், தனியாள் வேறுபாடு என்று தப்பிக்கொள்வது எவ்வாறு நியாயமாகும்.? நாமும் எம்மை மாற்றினாலென்ன?

இன்சொல்கள் எத்தனையோ ஆயிரம் இருக்க வன்சொற்கள் ஏன் உபயோகிப்பான். முகமலர்ந்து அன்பாகப்பேசி உபசரிப்பவர்களைக் காணும் போது உள்ளம் அடையும் புளகாங்கிதம் இருக்கின்றதே அந்த இன்பம் எதற்கும் ஈடாகுமா?

உறவுகள் மேம்பட என்ற தலைப்பிடப்பட்ட பல கருத்துக்கள் பகலவனின் அலுவலகத்தில் தொங்கவிடப்பட்டும் அதனை அவன் மனதில் பதிப்பதில்லை. ஆனால் இன்று தன்னையுமறியாமலே ஒரு கருத்து நினைவிற்கு வருகிறது. "புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்" எவ்வளவு தூரம் உண்மையானதும் யதார்த்த மானதுமான அறிவுறுத்தல். தற்காலத்திற்குத் தேவைப்பாடானதும் காத்திரமானதுமான கருத்து. முன்னைய காலங்களில் உறவுகள் நல்ல முறையில் அமைந்திருந்தது. போட்டிகள், பொறாமைகள், விரிசல்கள்

அற்று இருந்த காலம், ஆனால் இன்று புன்னகையைப் பரிமாற்றிக் கொள்வதற்கே பின்னடிக்கும் யுகம் இன்றைய யுகம்.

எது எப்படியோ பகலவன் இன்றிலிருந்து ஒரு புது வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஆயத்தமானான். தனது விடயங்களை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு ஆபீஸ் கண்கள் சுவர்மணிக்கூட்டையும் கைமணிக்கூட்டையும் மாறி மாறிப்பார்த்தன. அவசரமாக வீட்டிற்குச் செல்லவேண்டும் என்ற ஆவல் அவன் முகத்தில் நன்கு தெரிந்தது. “என்ன பகலவன் புதுமாப்பிள்ளை போல மணிக்கூட்டை அடிக்கடி பார்த்துக்கொள்ளுறீர்” நண்பன் ஒருவன் கேட்ட கேள்விக்கு புன்னகை ஒன்றை மட்டுமே பதிலாக அளித்துவிட்டுத் தனது கடமையில் மூழ்கிப்போனான். அலாரம் நான்கு தடவை அடிக்க வைல்களை அலுமாரிக்குள் வைத்துப்பூட்டிக்கொண்டான், கூட வரும் சுரேசையும் பொருட்படுத்தாது பைசிக்கிளை எடுத்துக்கொண்டு தனது வயதிற்கு மீறிய ஓட்டத்துடன் வீடு வந்து சேர்ந்தான்.

மனைவி சந்தியா கடைக்குட்டி லயனுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள் பகலவனை ஏறிட்டு நோக்கியவள் அதே வேகத்தில் தலையைத்தாழ்த்திக்கொண்டாள். அருகில் சென்ற பகலவன் சந்தியாவின் பழுத்த கன்னங்களைத் தடவி விட்டான் சந்தியாவுக்கோ தான் பூவுலகில் இருந்து விண்ணுலகிற்கு சஞ்சரிப்பது போன்ற உணர்வு. “சொறி சாந்தி “பகலவனின் உதட்டிலிருந்து வார்த்தைகள் மலர்ந்தன. சந்தியாவுக்கு எல்லாமே புதுமையாக இருந்தது. வாய்விட்டுக்கேட்டால் சீறிப்பாய்ந்து விடுவானே என்ற பயம். “சாந்தியா என்ன அப்படிப்பார்க்கிறீர்? மனதில எழுவதைத் தைரியமாகக்கேளும். அடிக்கடி சொல்லும் பக்கத்து வீட்டுத்தம்பதியர் போல இருக்க முயற்சிசெய்வம் என்ன சொல்லுறீர் ? அன்பாகவும் ஆதரவாகவும் கேட்டவன் தொடர்ந்து கூறினான். “சாந்தி மனிதன் நினைத்தால் முடியாதது ஒன்றுமில்லை அன்பான அமைதியான வாழ்க்கையை நடாத்த என்னாலான பங்களிப்பு எப்பவும் உண்டு. என்னை நம்பும்” பகலவனின் வார்த்தைகள் தேனாக செவிகளில் விழுந்து இதயத்துள் பாய சாந்தியின் வதனம் அன்றலர்ந்த தாமரையாக மிளிர்ந்து கொண்டது.

முற்றும்...

-நெல்லை லதாங்கி-

# அஞ்சலியகத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தின விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

சர்வதேச சிறுவர் தினக் கலைவிழா நிகழ்வானது அஞ்சலியகக் குழுமத்தினால் 21.10.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் "சிறுவர்களை மகிழ்வுடன் உருவாக்குவோம்" எனும் கருப்பொருளில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாவட்ட நீதிபதி ஸ்ரீ நந்தசேகரன் அவர்கள் வருகை தந்து சிறப்பித்திருந்தார். கௌரவ விருந்தினராக யாழ் அ.ம.தி மாகாண முதல்வர் அருட்தந்தை போல்நட்சத்திரம் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக MJFCF Team Leader S.கமலநாதன் அவர்களும் கலந்து இந் நிகழ்வை சிறப்பித்தார்கள். இந் நிகழ்வை சிறப்பிக்க அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், சமயப்பெரியார்கள், அஞ்சலியப் பணியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், பெற்றோர்கள், அஞ்சலி இளையோர் கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இந் நிகழ்விற்கு சமூகம் தந்திருந்தார்கள்.

இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பிரதம விருந்தினர் அவர்கள் அஞ்சலிக் கொடியேற்ற அஞ்சலிப் பூக்கள் சிறுவர்கள் அஞ்சலிக்கீதம் இசைத்தார்கள். விருந்தினர்கள் அனைவரையும் அஞ்சலிப் பூக்கள் சிறார்கள் பூச்செண்டு கொடுத்து வரவேற்றார்கள். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, வரவேற்பு நடனம், மனனம், குழுநடனம், ஆங்கிலப்பேச்சு, கவிதை, யோகா நடனம், பேச்சு, தனிநடனம், ஆங்கிலப்பாடல் போன்ற நிகழ்வுகளும் MJFCF நிறுவனத்தின் பணிகள் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டது. இந் நிகழ்வுகளை அஞ்சலிப்பூக்கள் சிறுவர்களும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 82 பாடசாலைகளுக்குமிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் இடம் பெற்ற மாணவர்களும் இணைந்து இந் நிகழ்வை சிறப்பூட்டி மெருகூட்டினார்கள் தொடர்ந்து, இயக்குனர் உரை, மாவட்ட நீதிபதி அவர்களின் உரை, வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம், பரிசில்கள் வழங்கல், போட்டியின் போது சகல விதத்திலும் உதவி புரிந்தவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப் பட்டார்கள் நன்றியுடன் இந் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தது.

இச் சிறுவர் தின நிகழ்வினை பார்த்து இரசித்த அனைவரும் சிறுவர்கள் கலை கலாச்சாரத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் திறமைகளையும் கண்டு வியந்து பாராட்டினார்கள்.

ற.மேகலா
உளசமூகப் பணியாளர், அஞ்சலியகம்.

# சிறுவர்கள் வளமுடன் வளர

**(சிறுவர் தினத்தை முன்னிட்டு அஞ்சலியகத்தினால் வடமராட்சி வலத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் 1ம் இடம் பெற்ற கட்டுரை)**

> சிறுவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு வெற்றிப் பாதைக்கான அவர்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றியை நோக்கியே செல்கின்றன.

இன்றைய நவீன உலகில் சிறுவர்களின் நோக்கானது "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" ஆகும். இப்படிப்பட்ட சிறுவர்களால் எமது உலகு முன்னேறும் என்ற நோக்கில் எமது பெரியோர்கள் அவர்களை வளர்த்து வருகின்றனர். சிறுவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு வெற்றிப் பாதைக்கான அவர்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றியை நோக்கியே செல்கின்றன. அவர் களின் முயற்சிகள் ஒன்றும் வீணாகுவதில்லை.

இன்றைய உலகில் சிறுசிறு பிள்ளைகளெல்லாம் கணனியில் தமக்குத் தேவையான அனைத்தையும் திரட்டி எடுத்துக் கொள்கின்றார்கள். அவர்களின் இவ்வாறான முயற்சியை யாரும் எதுவும் செய்ய இயலாது. ஒல்லாந்தர் காலத்தில் கட்டாயக்கல்வி வயது எல்லை பன்னிரண்டு ஆகும். தற்போது கட்டாயக்கல்வி வயது எல்லை பதினெட்டு ஆகும். சிறுவர் களின் ஊக்கம் அவர்களின் திறன்கள் எல்லாம் முன்பு வெளிப்படவில்லை. தற்போது அவர்களின் அறிவு உச்ச எல்லையை அடைகின்றது.

இவ்வாறான சிறுவர்களை வீட்டில் பெற்றோரும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர், சக நண்பர்களும் இவர்களை வளமுடன் வாழ வழிகாட்டுகின்றனர். அவர்களுக்கு நல்ல அறிவுறுத்தல்களை வழங்கி அன்பாக அவர்களை வழிகாட்டி வருகின்றனர். அவர்களை நன்னெறியில் திருப்பி நல்ல சிறுவர்களாக உருவாக வழிகாட்டுகின்றனர். சிறுவர்களை தமது பிள்ளைகள் என எண்ணி அவர்களை வளமுடன் வாழ மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

ஆனாலும் இவ்வாறான உலகத்தில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். சிறுவர்கடத்தல், துஷ்பிரயோகம் போன்ற பல அழிவுகள் எமக்கு ஏற்படுகின்றது. சிறுவர்களின் முயற்சிகள், அவர்களிடம் உள்ள திறமைகள் எல்லாம் குழி தோண்டி புதைக்கப் படுகின்றன. சிறுவர்கள் பலர் இன்று கடத்தப்பட்டு தெருவோரங்களில் பிச்சை

எடுக்கின்றனர். சிறுவர்களை பெற்றெடுத்த பெற்றோர் கூட அவர்களை வேலைசெய்ய அனுமதிப்பது, சிறுவர்களை தெருவில் விட்டு விட்டு செல்வது போன்றன பெரியவர்களுக்கு வழக்கமாகி விட்டது.

சிறுவர்கள் நல்ல திறமைகளை வளர்த்து சமூகத்தில் முன்னேற வேண்டுமாயின் அவர்களது உடல்,உள சமூக ஆரோக்கியம் மிகவும் முக்கியமாக அமைகின்றது. "கல்வி கண்கண்ட தெய்வம்" என்பது பெரியோரின் வாக்கு. சிறுவர்களின் நடவடிக்கை எல்லாம் சரியானவை அல்ல. அவர்கள் சில நேரம் தவறு விடலாம். அதை பெரியோர் அன்பாக எடுத்துக்கூற வேண்டும்.

ஒரு நல்ல மாணவன் ஓர் அன்னப்பறவைக்கு ஒப்பிடப்படுவான். ஏனெனில் அன்னப்பறவை பாலில் உள்ள நீரை அகற்றி விட்டு பாலை மட்டும் அருந்தும். மாணவர்களாகிய நாமும் தீய செயல்களை அகற்றி நற்செயல்களைச் செய்ய வேண்டும். "போன அலை திரும்பி வராது" அதேபோல் எமது சிறுவர் வாழ்வு முதுமையானால் மீண்டும் வராது. 2004ம் ஆண்டு தென்னாசிய வலயத்தின் அறிக்கைப்படி இலங்கை 2ம் இடத்தில் காணப்பட்டது. இதற்கு காரணம் அன்றைய சிறுவர்களின் முயற்சியும், அவர்களை வளமுடன் ஆளாக்கிய பெற்றோர், ஆசிரியர், அதிபரையே சாரும்.

இப்படிப்பட்ட சிறுவர்கள் இவ்வுலகில் வாழ்வது மிகவும் பெருமைக்குரியது. சிறுவர்கள் என்றால் வேறுயாரும் அல்ல. நாம் ஒவ்வொருவரும் சிறுவர்கள் தான். இன்றைய உலகில் சிறுவர்களை கண்டிப்பவர்கள் கூட பாரிய தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிறுவர்கள் வளமுடன் வாழ பாடசாலைக்ளில் பலமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். காலையில் இறைவணக்கம், பின்பு தினமும் உடற்பயிற்சி,இணைபாடவிதமான செயற்பாடுகள், விளையாட்டுக்கள் போன்றன நடைபெற்று வருகின்றன. பாடசாலையில் மட்டுமல்லாது சமூகத்தில் சில பெரியோர்களாலும் நற்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சிறுவர்கள் இவ்வுலகத்தில் பெரிதும் போற்றத் தக்கவர்கள் சிறுவர்கள் வளமுடன் வளர பலர் பங்களிப்பு செய்கின்றனர். சிறுவர்கள் வளமுடன் வளர CWW கன்னங்கரா இலவசக் கல்வியை ஏற்படுத்தினார்.

இன்றைய சிறுவர்கள் கணனியை விட மேலான அறிவு படைத்தவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. பெரியவர்களால் முடிக்க இயலாத சில வேலைகளை சிறியவர்கள் சர்வ சாதாரணமாக முடித்து விடுகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் கடத்தல் போன்றன நடைபெறக்கூடாது என்று பலர் கட்டளைகள் விதிக்கின்றனர். இவ்வாறான கட்டளைகளால் இவ்வாறான செயற்பாடுகள் குறைக்கப்பட்டு வருகின்றன. சிறுவர்கள் என்பது இறைவன் கொடுத்த பரிசு அதை பாதுகாப்பது பெரியோர்களாகிய உங்களது கடமை ஆகும். சிறுவர்களது ஆற்றல்கள் எல்லாம் இப்போது பல விதமாக வெளிவருகின்றன. அவர்களது திறமைகளை அவர்களே பயன்படுத்துகின்ற விதத்தில் பல விதமான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இப்போது சிறுவர்கள் வளமுடன் வளர பாடசாலையில் பல்வேறு செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அரசு ஊட்டச்சத்துள்ள உணவைக்கூட வழங்கி வருகின்றது. சிறுவர்களை கண்கள் போல் காத்து வருகின்ற பாடசாலைகள் இச்சமுதாயத்தில் பல காணப்படுகின்றன. மாணவராகிய நாம் ஒவ்வொருவரும் வளமுடன் வளர நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம்.

**"வளமுடன் வாழ்வோம், கல்வியை பெறுவோம்"**

**வி. றொசானா**

யா/சென்தோமஸ் றோ.க.த.க.பாடசாலை

அஞ்சலியே உனது சஞ்சிகைக்கான எனது ஆக்கத்தை கவி வரிகளின் மூலம் அனுப்பி வைக்கின்றேன்.

# அணையாதசுடராய்

**வாழ்க்கை வாழ்வதற்கே**
**கல்வி கற்பதற்கே**
**ஆலயம் தனைத் தரிசிப்பதற்கே**
**பதினாறு வயதினிலே – உன்**
**சஞ்சிகைக் கவசத்தில் எனைக்**
**கவி எழுதத் தூண்டும் – அஞ்சலியே**

**வற்றாத பொய்கையால்**
**நிறம் மாறாத பூவாய்**
**மலரும் மொட்டாய்**
**அணையாத சுடராய்**
**எம் தரணி தனில் வலம் வர**
**வாழ்த்துகின்றேன்......**

**த. லோகிதா**

தரம் –11 A,

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

# தற்கொலையில் இருந்து மீண்டெழல்

01. தற்கொலை என்றால் என்ன?

02. தற்கொலைக்கான காரணம் என்ன?

03. தற்கொலையின் விளைவு என்ன?

04. தற்கொலையினால் உண்டாகும் தீமை என்ன?

இவ்வாறு பல்வேறு கோணங்களில் சிந்திக்கும் போது தான் சரியான திருப்தியான விடை கிடைக்கின்றது.

மேலே குறிப்பிட்ட வினாவுக்குப்பதில் தேடுவோமானால் கிடைக்கக்கூடிய காத்திரமான பதில் "பயம்" என்ற உணர்வு தான். இத்தகைய உணர்வின் பின்னணியில் இருந்துதான் தோல்விகளுக்குப் பொருத்தமான பரிசாக தற்கொலையை நினைத்துக் கொள்கின்றனர். இத்தகைய நினைப்பு திருப்தியைத் தருமா?

திருப்தி என்றால் என்ன? வாழ்வில் "உண்டாக்கும் சந்தோசமான அனுபவங்களின்" தொகுப்பே திருப்தியாகும் இத்தகைய திருப்தியை எண்ணி வாழ்ந்து விட்டால் சந்தோசம் காணாதோர் யாருண்டு.

எனவே பயம் என்ற உணர்வை அகற்றுவதற்கு காரணம் தேடுவோமானால் சுயவிடயங்களில் இருந்தே கிடைக்கின்றது. அதாவது பய உணர்வின் பின்னணி பலவீனமாகும். இத்தகைய பலவீனம் புறச்சூழலில் சமுகத்தில் இருந்து வந்து சேர்ந்தாலும் சிந்தனையின் பிறப்பிடமாகிய மூளையில் அறிவில் உடலில் உணர்வு எண்ணத்தில் இருந்தே தோன்றுகின்றது.

உடல் அறிவு உளம் ரீதியாகவே உண்டாகும் தாழ்வு அல்லது குறைபாட்டினால் பலவீனம் வலுப்பெறுகின்றமை இனம்காண முடிகின்றது தினசரி அனேகமானோர் உணர்வு முரண்பாட்டினால் தங்களைத் தாங்களே எண்ணங்களினால் தற்கொலை செய்து கொள்கின்றனர்

உதாரணம் : கலைரசனை இன்மை, ஆலயவழிபாடுகள் இன்மை ஆன்மீகஆர்வம் இன்மை, தீராத தெளிவற்ற சிந்தனையினால் தீயபழக்கம், கவலை, சோர்வு, சோகம், சோம்பல், பிற்போக்கு சிந்தனை, வன்முறை, பிடிவாதம், பழிவாங்கல், காம உணர்வு, அதிகாரவெறி, தலைக்கனம், விதண்டாவாதம், நகைச்சுவை இன்மை, பாலியல் துஷ்பிரயோகம், ஏமாற்று, கொலை, சமாதானம், பொறுமை, அன்பு இவற்றுக்கு மேலாக அமைதி இன்மையினால் ஒவ்வொருவரும் தினசரி சிறிய அளவில் உணர்வுகளின் ஊடாக உடலைக் கொலை செய்து விடுகின்றனர். இத்தகைய நினைவு தற்கொலைக்குள் அடக்கப்படுகின்றது.

எனவே இத்தகைய தற்கொலையிலிருந்து மீண்டெழ மனதில் தெளிவு துணிவு இருப்பின் அமைதி உண்டாகும், விடுதலை கிடைக்கும்.

-சித்திரச் சீராளன்-

## உங்களுடன் கொஞ்ச நேரம்,



“அஞ்சலி” புத்தகத்தின் முன் குறிப்பிட்ட வரை படம் உங்கள் பார்வையில் எவ்வாறான சிந்தனைகளை, கருத்துக்களை, உருவாக்குகின்றது என்பதை எங்களுக்கு கவிதையாகவோ, கட்டுரையாகவோ, சிறுகதையாகவோ, அல்லது சிந்தனைத் துளிகளாகவோ 30.03.2013 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

# கவிதைத்தொகுப்பு

## மகிழ்ச்சிக்கான வழி

மனிதன் புனிதனாக
மனிதம் புனிதமாக
நேசித்திடு மகிழ்வு தனை
உள்ளத்தில் உள்ளதை
உள்ளவாறு உரைப்பது உவகை

சந்தோச வாழ்வு தனில்
சங்கடங்கள் நிழலாய் வருமே
இன்பம் என்ற ஒற்றை வீட்டுடன்
துன்பம் என்ற ஒற்றை வீடும்
இணைந்து வருமே - இது
இறைவன் தந்த வீடுகள்
இன்பதுன்பம் சுழலும் சக்கரம்

மகிழ்ச்சிக்கான வழி
மாண்புடன் வாழ்வதே
மனிதநேயத்துடன் இருந்திடு
இன்னாருக்கு உதவிடு
இன்சொற்கள் பேசிடு

இதயக்கட்டை அவிழ்த்திடு
இறைதனை நினைந்திடு
கவலையின்றி ஒன்றுபட
கரங்களை ஒன்றுசேர்
மகிழ்வழிதனை தேடு
சோகத்தை தவிர்த்திடு
சோலை எழிலை இரசித்திடு
இரசனை மிகுந்த உள்ளம்
உண்மையில் பூரிக்கும்
இனியதை கற்றுத்தரும்
புரியாத பிரியம் பிரியும்
போது புரிவதே களிப்பு தந்த இனிது.

பற்றும் பரிதவிப்பும் பாசமும்
பாங்குடனே பரிட்சயமாக
களிப்புடன் கண்ணாயிரு
மகிழ்ச்சி ஓர் மகோன்னதம்
உவகை உன்னதச் செல்வம்

**வி. து. பவித்திரா**
தும்பளை கிழக்கு,பருத்தித்துறை.

## நட்பு

வாழ்க்கை ஒரு வானம்
அதில் நட்பு ஒரு வானவில்
நித்தம் பல வர்ணம்
உறவுகள் பிரியலாம் நட்பு பிரியலாகாது
நல்ல நட்பு வெற்றியின் வேலி

நல்ல நண்பன் வெற்றியின் தோழன்
சண்டைகள் போடுவது அன்பின்
பெருக்கம் அல்லவா - மறக்க
முடியுமா உயிருள்ள வரை
நம் நட்பை!

**து. ஜனார்த்தனா**
கலைப்பிரிவு

# மொட்டுக்கள் நாம்.....

**(சிறுவர் தினத்தை முன்னிட்டு அஞ்சலியகத்தினால் வடமராட்சி வலத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் 1ம் இடம் பெற்ற கவிதை)**

மொட்டுக்கள் நாம் - நாளை
மெல்ல சிரிக்க காத்திருக்கின்றோம்..
எண்ணங்கள் பல - எம்முள்
தேனோடு பூத்துக்கிடக்கின்றன..

மெல்ல இதழ் சிரிக்கும் முன் - எம்மை
கருவறுக்க காத்துக்கிடக்கின்றன
நஞ்சுப் பூக்கள் சில...

இதழ் விரித்தாடி எம்மை - தம்
இச்சைப்படி நடாத்த எண்ணி
சிறை பிடிக்க காத்துக்கிடக்கின்றன
நரகத்து முட்கள்..

நாளை வரும் அதில்
நாம் தலைவராவோம் என்று
நம்பிக்கையோடு எம் நெஞ்சு
நாள் பார்த்துள்ளது..

புது மொட்டுக்கள் நாம் - எம்மை
மலர விடுங்கள்..
சுதந்திர காற்றை தேடி
தொலைகின்றோம்...
சுகமான காற்றாவது தாருங்கள் .


-சத்தியப்பிரியன்-
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

PUBLIC LIBRARY
JAFFNA



# சிறுவர்கள் புது உலகம் படைக்க.....

(சிறுவர் தினத்தை முன்னிட்டு அஞ்சலியகத்தினால் வடமராட்சி வலத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் 1ம் இடம் பெற்ற சிறுகதை)



" கற்க கசடற கற்றபவை...." என்ற குரலானது தரம் தரம் பத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவ்வழியில் வந்த கல்லூரி அதிபர் தரம் பத்திற்குள் நுழைய அனைத்து மாணவர்களும் பணிவுடன் எழுந்து நின்று "குட் மோர்னிங்சேர்" என்றனர். வணக்கம் பிள்ளைகளே, அமருங்கள் என்ற ஆசிரியை டிலானி எழுந்து நிற்க அதிபர் ஆசனத்தில் அமர்ந்தார். அதிபரிடம் டிலானி ஆசிரியை வரவுப் புத்தகத்தை நீட்டினார். அதிலிருந்து மதுஜா என்ற மாணவி பாடசாலைக்கு ஒரு வாரமாக சமுகமளிக்காமை தெரிய வந்தது. அதிபர் மாணவர்களைப் பார்த்து "மதுஜா ஏன் வரவில்லை?" எனக் கேட்டார். அனைத்து மாணவர்களும் "தெரியாது சேர்" என்றனர். மதுஜாவின் வீட்டின் அருகில் இருக்கும் சிவாஸிடம் "நாளை அவரது பெற்றோரை என்னை வந்து சந்திக்கச் சொல்லுங்கள்" எனக்கூறி விட்டு அதிபர் வகுப்பறையை விட்டு வெளியேறினார். அவ்வேளையில் "கணீர் கணீர்" என இடைவேளை மணி ஒலிக்க டிலானி ஆசிரியரும் வகுப்பை விட்டு வெளியேறினார்.

"சிவாஸ் மதுஜா ஏன்டா இப்ப ஸ்கூல் வாரேல்ல? உனக்குத் தெரியாதோடா" என சக மாணவி ரம்யா கேட்டாள். மதுஜாவின் வகுப்பு நண்பர்களான டினேஸ், ராமு, கல்யாணி, தர்சிகா, கஸ்தூரி, தனு அனைவரும் அதே கேள்வியை அவனிடம் கேட்டனர். "எனக்கு சரியா தெரியல ஆனால் இப்ப மதுஜா வீட்ட ஒரே அழுகைச் சத்தமா இருக்கு நேற்று நான் பாடம் விட்டுப் போகேக்க மதுஜாவை வீட்டில கண்டனான். முகமெல்லாம் வீங்கி கண்ணெல்லாம் சிவந்து இருந்தது. மதுஜாவோ எண்டு அடையாளம் தெரியாத மாதிரி மாறிப் போனாள். அவளின்ர வீட்டில ஏதோ பிரச்சினை போல எண்டு நினைக்கிறன்" என்றான் சிவாஸ்.

மதுஜா இதே வகுப்பில் கல்வி கற்கும் மாணவி தான் மதுஜா. வெகு சுட்டித்தனமான பெண். படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி ஏன்

எந்தத் துறையிலும் அவளே முதன்மையானவள். அவளின் தந்தை ஓர் விவசாயி. தாய் வீட்டுப் பணிப்பெண். வீட்டிற்கு அவளே ஒரு பிள்ளை. வறுமையான குடும்பமாக இருந்தாலும் மதுஜாவின் குடும்பம் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து வந்தது. வகுப்பில் அவளைப் பிடிக்காதவர்கள் யாருமில்லை. அனைவரும் அவளுக்கு உயிர் நண்பர்களே

"சிவாஸ் நாங்கள் எல்லோரும் இன்று மாலை மதுஜாவின் வீட்டிற்கு சென்று என்ன பிரச்சினை என்று கேட்டு வருவோம்" என அனைவரும் அதனை ஆமோதித்தனர். மாலை 5 மணியளவில் அவர்களின் வீட்டிற்கு சிவாஸ், டினேஸ், ராமு, தர்சிகா, கல்யாணி, தனு, கஸ்தூரி அனைவரும் சென்றனர். உள்ளே சென்று பார்த்தால் மதுஜாவின் தாய் தரையிலே ஓலைப் பாயில் எலும்பும் தோலுமாக படுத்திருந்தார். மதுஜா தந்தையின் மடியில் படுத்து அழுது கொண்டிருந்தாள்.

இவர்களை கண்டதும் அவசரமாக எழுந்து முகத்தை சீர் செய்து கொண்டு "வாங்கோ வாங்கோ" என சிரித்தவாறு வரவேற்க முயன்றாள். ஆனால் அவளால் முடியவில்லை. அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடியது. கஸ்தூரி ஓடி வந்து தோளில் சாய்த்துக் கொண்டு "ஏன்பு மது அழுகிறாய்? என்னடி இது கோலம் எனக் கேட்டாள்" சில நிமிடங்களில் அவளது அழுகை ஓய்ந்தது. "அம்மாவிற்கு வயிற்றில் ஏதோ கட்டியாம். அது இப்ப பெரிசா வளர்ந்துட்டாம். இன்னும் ஒரு மாதத்தில் ஆபரேசன் செய்யாட்டி அவவைக் காப்பாற்ற முடியாதாம் ஆபரேசனுக்கு இரண்டு லட்சம் வேணுமாமடி அவ்வளவு பணத்துக்கு நாங்கள் எங்கயடி போறது. அம்மாவுக்கு இப்ப வலி வந்தால் உயிர் போற மாதிரி கத்துவார். எங்களால பார்த்து கொண்டு இருக்க முடியல. பேசாம நாங்க மூன்று பேரும் செத்துப் போயிடலாமோ என்று தோணுது" எனக்கூறிக் கொண்டே மறுபடியும் அழ ஆரம்பித்தாள். நண்பர்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அனைவரும் ஒரு கணம் அதிர்ச்சியில் திகைத்து நின்றனர். "மதுஜா அழாத எங்கட வீடுகளில் நாங்கள் முடிந்த வரை கேட்டுப் பார்த்து எங்களால் முடிந்த உதவியை செய்யிறம்" என ஆறுதல் கூறி விடைபெற்றனர்.

போகும் வழியில் அனைவரும் சிந்தித்தவாறே சென்றனர். கஸ்தூரி, தர்சிகா, சிவாஸ், டினேஸ் நான்கு பேருமே வசதியானவர்கள் தான்.

நான்கு பேரும் தமது வீட்டில் உதவி கேட்குமாறு கூறி விடைபெற்று வீடுகளிற்கு சென்றனர்.

வீட்டிற்கு சென்றதும் கஸ்தூரி "அப்பா எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா" எனக் கேட்டாள் அவளது தந்தையும் சரி என்ற மதுஜாவின் பிரச்சினையை கஸ்தூரி தந்தையிடம் கூறினாள். அவளது தந்தையோ எதுவித பதிலும் கூறாமல் போய் விட்டார். மறு நாள் காலையில் பாடசாலை செல்ல முன் கஸ்தூரி தந்தையின் அலுவலக அறைக்குச் சென்று "அப்பா மதுஜாவிற்கு உதவி செய்யுங்கோவன். ப்ளீஸ் அப்பா, அவளின்ர அம்மா பாவம். எங்களால் முடிந்த உதவியை நாங்கள் செய்தால் அவட அம்மாவும் உயிர் பிழைப்பா தானே" என்று கேட்டாள்.

"உதவலாம் தானம்மா. ஆனால் அதுக்கு காசு நிறையக் கொடுக்கிற அளவு எங்களிட்ட வசதி இல்லை. இந்தா இந்த 500 ரூபாவை அவளிடம் கொடு." எனக் கூறி ஒரு ஐந்நூறுரூபாவை கஸ்தூரியின் தந்தை நீட்ட அவள் அதை வாங்காமல் "பணம் இருந்தும் உதவ மனம் இல்லாத குடும்பத்தில் வந்து பிறந்து விட்டோமே" என மனதில் எண்ணியவாறு வீட்டை விட்டு வெளியேறினாள்.

போகும் வழியில் கஸ்தூரியின் மனம் மதுஜாவை பற்றியே சிந்தித்தது. மற்ற நண்பர்கள் உதவும் போது தான் உதவ முடியாமல் போகப்போகிறதே என எண்ணியவாறே வகுப்பறைக்குள் நுழைந்தாள். உள்ளே சென்றதும் தனது நண்பர்களைப் பார்த்தாள். அனைவரது முகங்களையும் கவலை குடி கொண்டிருந்தது. "நான் எங்கட வீட்ட காசு கேட்க எங்கட அப்பா ஐந்நூறு ரூபா தான் தந்தவர். அதை நான் வாங்காமலே வந்துட்டான். எங்கட குடும்பத்தை நினைக்கவே எனக்கு வெட்கமா இருக்கு. இவ்வளவு பணவசதி இருந்தும் உதவி செய்ய மாட்டினமாம்" எனக் கூறி கஸ்தூரி அழுதவாறே கூறினாள்.

அதே நேரம் அவளின் மற்றைய நண்பர்களும் அழ "ஏன் நான் அழக் காரணமிருக்கு. நீங்கள் ஏன் அழுகிறியள் என்று கஸ்தூரி கேட்டாள். அப்போது அனைவரும் தங்களது வீடுகளிலும் பணம் தர மறுத்து விட்டனர் எனக் கூறினர். அனைவருமே வகுப்பில் அமர்ந்தவாறு யோசித்தனர். "நான் கடந்த வாரம் பேப்பரில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். அது ஒரு மருத்துவ விளம்பரம். அவசரமாக பத்து பைந்து ஓ

பிளஸ் இரத்தம் வேணுமாம். ஒரு பைந்து இரத்தம் வழங்குபவர்களுக்கு நாற்பதாயிரம் ரூபா தரப்படும் என இருந்தது. இதனைக் கேட்டதும் அனைவரது முகமும் அதிர்ச்சியாக அவனைப் பார்த்தது. ஆனால் மறுகணமே தெளிவடைந்தது.

ஆம் அவர்கள் தமது நண்பியின் தாய்க்காக இரத்த தானம் செய்து பணத்தை கொடுப்பதாக முடிவு செய்தனர். அன்றைய தினம் வகுப்பறையில் எவ்வாறு,எப்படி,எத்தனை மணிக்கு செல்லலாம் எனத் திட்டமிட்டனர். மறுநாள் காலையில் பாடசாலைக்கு வழமை போல் தயாராகினர்.ஆனால் பாடசாலை செல்லாமல் யாழ்ப்பாணம் செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தனர். பேருந்தும் யாழ்ப்பாணம் சென்றது.யாழ்ப்பாணம் சென்றதும் அனைவரும் இறங்கி யாழ் போதனா வைத்திய சாலைக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் இரத்த தானம் பற்றி விசாரித்தனர். அங்குள்ள தாதி அவர்களை அங்கு அழைத்துச் சென்றார். ஆனால் வைத்தியரோ "உங்களுக்கு இன்னும் பதினெட்டு வயது ஆகவில்லை. பணத்திற்கு ஆசைப்பட்டு ரத்த தானம் செய்ய வந்திருக் கிறியளே எனக் கண்டித்தார்.

ஆனால் அவர்கள் தமது நண்பியின் தாய் பற்றி விபரம் கூறி நடந்த முழுவதையும் கூறினர். "இதனால் தான் நாங்கள் இம் முடிவுக்கு வந்தோம் டாக்டர். ப்ளீஸ் எங்கட மதுட அம்மாவை காப்பாத்த நீங்கள் தான் மனம் வைக்கணும் எனக்கெஞ்சினர். டாக்டரோ மனம் இறங்குவதாக தெரியவில்லை. அனைவரும் டாக்டரின் காலில் விழுந்து "ப்ளீஸ் சேர். எப்படியாவது இந்த உதவியை செய்யுங்கோ. எங்கட மதுட அம்மாவை நாங்கள் காப்பத்தனும் நீங்கள் இந்த உதவியை செய்யாவிட்டால் நாங்கள் அனைவரும் இங்கேயே உண்ணாவிரதம் இருப்போம்" என அழுதனர்.

டாக்டருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அப்படியே ஸ்தம்பித்துப் போனார். அங்குள்ள தாதியும் திகைத்து நின்றாள். டாக்டர் "எழும்புங்கோ முதலில்" என்றார். ஆனால் அவர்களோ "நீங்கள் உதவி செய்வதாக வாக்களியுங்கள்" என்ற "சரி நான் டரை பண்றன்" என்றார். டாக்டர் அவர்களை ரூமில் அமர வைத்தார். "மதுஜாவின் அம்மாவிற்கு எங்கு வைத்தியம் பார்த்தார்கள்" என்றார். அனைவரும் "இங்கு தான்" என்ற பின்னர் டாக்டரும் வெளியே சென்று விசாரித்த போது அவர்கள் கூறியது உண்மை எனத்தெரியவந்தது. அவரும் சரி எனச் சம்மதித்து ரத்தம் எடுத்து

விட்டு அவர்களுக்கு காசோலை வழங்கினார். "இந்தக் காலத்தில் உங்களை போல் சிறுவர்களைப் பார்ப்பது அரிது" உங்களை நினைக்கும் போது எனக்கு பெருமையாக இருக்கிறது.

அவ்வேளையில் பள்ளியிலிருந்து பிள்ளைகள் வரவில்லை எனத் தேடிப் பாடசாலை சென்ற பெற்றோர்கள் விபரமறிந்து வைத்திய சாலைக்கு வந்தனர். அவர்களைக் கண்ட டாக்டர் இப்படிப்பட்ட பிள்ளைகளைப் பெற்றதற்கு நீங்கள் ரொம்ப பெருமைப்படனும். இந்தக் காலத்தில் சுயநலமாக வாழும் மனிதர்கள் மத்தியில் இப்படிப்பட்ட பிள்ளைகள் கிடைத்தது உங்கள் புண்ணியம் என்றார். பெற்றோர்களோ வெட்கி தலை குனிந்தனர். தாங்களே உதவ நினைக்கவில்லை. தம் பிள்ளைகளின் உதவி மனப்பாங்கை நினைத்து பெருமைப்பட்டு தங்களின் பிள்ளைகளை கட்டியணைத்தனர்.

அந்தப் பணத்தில் மதுஜாவின் தாயாரின் சிகிச்சை வெற்றி கரமாக நடந்தேறியது. மதுஜாவிற்கோ தன் நண்பர்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. அவள் தன் நண்பர்களை நினைத்து பெருமிதம் கொண்டாள். இந்தக் கதை ஊரெங்கும் பரவி அனைவரும் அவர்களைப் பாராட்டினார்கள். கல்லூரியின் முதல்வர் அவர்களை அனைவருக்கும் முன்னாள் கௌரவித்தார் "இவர்களால் இந்த உலகம் புதுமையடையும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாவார்கள்" என்ற நம்பிக்கையோடு.....,

**பி.லக்ஷியா**

யா/வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி

"அஞ்சலி உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை" **வாங்கி விட்டீர்களா......?**

- தனிப்பிரதி - 40/- (இந்த ஆண்டு முதல்)
- ஆண்டுச்சந்தா - 150/- (இந்த ஆண்டு முதல்)
- சந்தாப்பணத்தை காசுக்கட்டளையாகவோ (பரு. பிரதான தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு) அல்லது பணமாகவோ அனுப்பலாம்.
- எமது முகவரி - "அஞ்சலி சஞ்சிகை" நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை.
- தொலைபேசி இல.- 0213217262 , 0212056006 , 0772660217
- Mail Address - anjaliaham@gmail.com


# இளமை இனிமை

## இளைஞர்களின் பலம்



மாறும் உலகில்
மாற்றமே நிலையாகிவிட்டது
இளைஞர்களே
இன்றைய உங்கள்
இரத்தக்கொதிப்பு மட்டும்
மாறும் உலகில்
மாற்றமில்லாமல் போராடுகின்றது
எத்தனை சவால்களை
எதிரிட்டு வெற்றி கொண்டாலும்
இளம் இரத்த கொதிப்பை மட்டும்
வெற்றி கொள்ளவே முடியாது
இதுதான் இளைஞர்களே
இளம் சமுதாயத்தின் முழுப்பலம்
ஒரு நாட்டின் ஊன்றுகோலாய்
ஓங்கி நிற்கும் நீங்கள்
பத்தடி பாய்ந்தாலே
பதறும் இவ்வுலகம்
பதினாறடி பாய்ந்தால்
மாறாதா?
மாறும்
இளம் நெஞ்சங்களே
இருட்டில் போராட வேண்டும்
என எண்ணாதீர்கள்
பகலிலும் போராடுங்கள்
அப்போது தான்
வெற்றிப்படி உங்கள் முன்
வெற்றிக்கிண்ணமாய் திகழும்.

**ம.மதுஷா**
11C
யா மெதடிஸ்த பெண்கள்



# பாவ இருள் அகற்றும் ஒளி

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டினில் குடியிருப்போர் மீது சுடரொளி உதித்தது" ஆம் அந்தச் சுடரொளியே பாவத்தின் தளைகளைக் களைந்து இருளகற்றி ஒளியேற்ற வந்த மாபரன் இயேசுக்கிறீஸ்து.

அன்று ஆதிப்பெற்றோரின் பாவத்தினால் மனிதன் அருள் நிலையினை இழந்தான் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவினில் இடைவெளி ஏற்பட்டது. இடைவெளி ஏற்பட்ட போதிலும் இறைவன் மனுக்குலத்தின் மீதுள்ள அன்பினைக் குறைத்துக் கொள்ள வில்லை. பாவத்தில் மூழ்கியிருந்த மனுக்குலத்தினை மீட்பதற்காக தம் ஒரே பேறான மகன் இயேசுக்கிறீஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்புவதாக வாக்களித்தார். அவ்வாக்கு நிறைவேறவே மரியாள் என்னும் கன்னிகையிடம் வானதூதரை அனுப்பி அருள் மிகப்பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்முடனே என்று வாழ்த்திய திருவாக்கின் மூலம் தூய ஆவியின் அருளினால் அவள் கருத்தாங்கினாள்.

மார்களியின் மாகுளிரில் மாடடைக் குடிலினில் ஏழ்மையின் வடிவில் மானிட உருவெடுத்து மரி மைந்தன் அவதரித்தார். பாலன் யேசு வளர வளர ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் அறிவிலும் மிளிர்ந்து கடவுளிற்கும் மனிதருக்கும் மென்மேலும் உகந்தவர் ஆனார்.

இவர் தமது முப்பது வயதினில் பகிரங்கப்பணியினைத் தொடங்கினார். நானே உலகின் ஒளி என்னைப் பின் செல்பவன் இருளினில் நடவான் என்று இயேசு திருவாய் மலர்ந்தார். அவர் இவ்வுலகில் வாழ்ந்தபோது பற்பல புதுமைகளைச் செய்தார். ஏழைகள், கைவிடப்பட்டவர்கள் மீது விசேட கருணை கொண்டிருந்தார். விசேட விதமாகப் பாவிகளைத் தேடிப்பரமன் இயேசுவின் பாதங்கள் படியேறின.

நீதிமான்கள் பலரைக்குறித்து விண்ணகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியை விட மனம்திரும்பும் ஒரு பாவியைக் குறித்தே விண்ணகத்தில் அதிக உண்டாகின்றது என்பதனை ஊதாரிப்பிள்ளையின் உவமை,

காணாமற் போன ஆடு, காணாமற் போன காசு என்ற உவமைகள் மூலம் விளக்கியுள்ளார்.

இயேசு பாவிகளோடு விருந்துண்பதினையும் உறவாடுவதனையும் கண்ட பரிசேயரும், சட்ட வல்லுனரும் இவர் பாவிகளோடு விருந்துண்கின்றாரே பழகுகின்றாரே என்று அவருக்கு எதிராக முணுமுணுத்தனர் இவையனைத்தையும் அறிந்து யேசு மருத்துவன் நோயற்றவருக்கு அன்றி நோயுற்றவருக்கே தேவை. நீதிமான்களை அல்ல பாவிகளை அழைக்கவே நான் இவ்வுலகிற்கு வந்தேன் என்று பதிலளித்தார். இதனை செயல்மூலம் எடுத்துக்காட்ட திமிர்வாதக்காரனைக் குணப் படுத்திய சம்பவத்தில் "மகனே உன் படுக்கையினைத் தூக்கிக்கொண்டு சமாதானமாகப் போ" என்று கூறினார்.

இன்று கையடக்கத்தொலைபேசிகளினதும் கணனிகளினதும் தவறான பாவனையால் தமது வாழ்வினைத் தொலைத்து விட்டு நிற்பவர்கள் ஏராளம் ஏராளம் இவர்களிற்கு இருளகற்றி ஒளிகொடுக்க ஒளியின் மாபரனே நீ விரைந்து வாராய்

அன்று பார்வையற்ற குருடனின் கண்களிற்கு ஒளி கொடுத்துப் பார்வையளித்த இயேசுவே இன்று போதைப்பொருட்களிலும் குடிபோதையிலும் தமது வாழ்வினைத் தொலைத்து விட்டு வாழ வழி தெரியாது இருளினில் சிக்கித் தவிக்கும் மானிடர் எம்மவர்க்கு மகிழ்வொளி கொடுக்க ஒளியின் பரமனே நீ விரைந்து வாராய்.

வறுமை ஒழிந்து மக்கள் மனங்களில் நின்மதி பிறந்திடவும் ஆணவம் ஒழிந்து அமைதி நிலவிடவும் வாழ்க்கைப் போராட்டங்களினால் நின்மதியினை இழந்து பல்வேறு பிரச்சனைகளினால் தமது மனங்களினைக் கடினமாக்கி வாழும் மானிடர் எமக்கு மகிழ்வொளி அளிக்க ஒளியின் வேந்தனே நீ விரைந்து வாராய். பாவ இருள் அகற்றும் பரமனே இப்பார் மகிழ விரைந்து வாராய்.

**தே. நிருபனா**

( ஒளி விழா பேச்சுப் போட்டியில் 1ம் இடம் பெற்றது )

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

தரம் 5 B

# சிறுவர்களே மலரும் மொட்டுக்கள்

**(சிறுவர் தினத்தை முன்னிட்டு அஞ்சலியகத்தினால் அஞ்சலியக மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் 1ம் இடம் பெற்ற கவிதை)**

காலங்கள் செல்லச் செல்ல
கடந்து வரும் நாட்களில்
மலர்ந்து வரும் மொட்டுக்கள் - புது
மலர்ச்சி தரும் சிறுவர்களே

எதிர்காலம் தனை
எழுச்சியுடன் கட்டியெழுப்ப
சிறந்த தீர்மானம் எடுத்து வரும்
சிறுவர்களே மலரும் மொட்டுக்கள்

கலங்கி நிற்கும் உள்ளங்களின்
கண்ணீர்களைப் போக்கிட
காலையில் மலரும் மொட்டுக்களாய்
காணும் சிறுவர்களே மலரும் மொட்டுக்கள்
நல்லொழுக்கம் மற்றும் நற்பண்புகளை
நாள்தோறும் பயின்று
நற்சமுதாயம் உருவாக்கிட
நிதமும் பயிற்சி பெறும் சிறுவர்களே மலரும் மொட்டுக்கள்

இடிந்து போகும் வாழ்வதனை
இணைத்துச் சேர்த்துக் கட்டியே
இன்பமாய் வாழ வழிகாட்டும்
இனிய சிறுவர்களே மலரும் மொட்டுக்கள்

நல்ல நூல்கள் பல கற்று
நல்லுலகம் படைத்திட
புதிதாய் மலரும் மொட்டுக்கள் போல்
புவி தனில் வந்தோர் சிறுவர்களே

**கிருந்திகா**
தரம் 09
அஞ்சலியகம்.

# ஒற்றுமையே பலம்

இயற்கை எழில் கொஞ்சும் தமிழ்நாடு அதுவே எமது தாய்நாடு இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு சிறார்களும் நாளைய நாட்டின் தலைவர்கள் ஆனால் எமது முன்னோர்கள் யாதி,மதம்,பேதம் என்ற கொடிய நோயை நம் ஒவ்வொருவர் மனதிலும் அணையாநெருப்பாக ஏற்றிவிட்டார்கள் அவ்வாறு ஏற்றிய நெருப்பு இன்று நால்மதமும் நான்கு திசைகளாக வழிவகுத்துவிட்டது. இதற்கெல்லாம் காரணம் நாம் தான் நாம் பார்க்கும் யாதி,மதம், தான். இந்த இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனும் இலங்கை அன்னையின் பிள்ளைகள் நாம் எல்லோரும் சகோதர,சகோதரிகள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று வாழ்வோமானால் பிரச்சினை என்ற சொல்லே மறந்துவிடும். நாம் ஒவ்வொருவரும் சிறிதுநேரம் நம்மைப்பற்றி நாமே சிந்திப்போமானால் எம்முடைய நாட்டின் அனேக பிரச்சினைகளுக்கு விடை கிடைத்துவிடும். மக்களாகிய நாம் தான் யாதி,மதம், என்ற சொல்லைக் கொண்டு நாமே நம்மை நொந்து கொள்கிறோம். இவ்வளவு சிந்திக்கின்ற நாம் எப்போதாவது சிவன் என்ன யாதி? யேசு என்ன யாதி? அல்லா என்ன யாதி? புத்தர் என்ன யாதி என்று சிந்திப்போமா? அப்படியென்றால் அவர்களால் படைக்கப்பட்ட ஆன்மாவாகிய நமக்கு மட்டும் எதற்கடா? யாதி,மதம் ஐந்தறிவு படைத்த மிருகம்,பறவை கூட ஒற்றுமையாக ஒன்றுகூடி வாழ்கின்றன.

ஆனால் ஆறறிவு படைத்த நாம் ஒருநாட்டில் இருந்து கொண்டே வெவ்வேறு நாட்டவரைப் போல் வாழ்கின்றோம். நாம் சிறுவர்களாக இருக்கும் போது "வேடனும் புறாவும்" என்ற கதைபடித்திருக்கின்றோம். அதாவது ஒரு நாள் வேடன் ஒருவன் வலை ஒன்றை விரித்து விட்டு அதன் மேல் தானியங்களை தூவி விட்டு மறைந்து நின்றானாம் அவ்வழியே வந்த புறாக்கள் தானியங்களை கண்டவுடன் அதனை சாப்பிடும் ஆசையால் வலையில் அகப்பட்டுவிட்டன. இதனை அறிந்த வேடன் புறாக்களை பிடிக்க வரும் போது அங்கிருந்து புறாக்கள் வலையுடன் பறந்துவிட்டன. அப்படியானால் அந்தப்புறாக்கள் பறந்து உயிர்தப்பியமை அவற்றிடம் காணப்பட்ட ஒற்றுமையால் தான் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற நாட்டின் கௌரவத்தையும் மேன்மையையும் பாதுகாப்போம்.

**க. சுவாதி**
தரம் 08
திரு/இராமகிருஷ்ண மிசன் மகா.வித்தி.

# உட்படுத்தல் கல்விக்கான பிரவேசமும் கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளின் குணநலன்களும் காரணங்களும்

உட்படுத்தற் கல்வியில் கற்றல் இடர்பாடுகளைக் கொண்ட பிள்ளைகளின் கணிப்பீடு, எண்ணக்கரு இனங்காணல், தொடர்பாடல் விடயங்களை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியுள்ளது. உங்கள் வகுப்பறைகளில்கூட கற்றலின்போது வழக்கத்துக்கு மாறான பிரச்சினைகளைப் பிரதிபலிக்கும் மாணவர்களை இனங்கண்டிருப்பீர்கள் இத்தகைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் என்பவர்களின் தேவைகளுடனும் ஒத்துப்போவதற்கு போராட வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஒரு கணப்பொழுதில் சாதாரணமாகத் தோற்றமளிக்கும் இப்பிள்ளைகள் அடுத்தகணமே கற்றலில் குறைபாடு உடையவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள்.

இவர்கள் ஏன் கற்றல் குறைபாடுகளை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள் என்று நீங்கள் எப்போதும் சிந்தித்ததுண்டா? இவர்களை வேறுபடுத்திக் காட்டும் பிரதான பண்புகள், குறிகள் யாவை? 'கற்றல் இடர்பாடுகளை உடைய பிள்ளைகள்' என்று குறிப்பிடப்படும் பிள்ளைகளின் பண்புகள் காரணங்கள் பற்றி இங்கு ஆராயவுள்ளோம்.

கற்றல் இடர்பாடுகளை உடைய பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் தமது கவனத்தையும் கவலையையும் வெளிப்படுத்துவதுண்டு கற்றலில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிள்ளைதொடர்பான மர்மம் புதியதொரு விடயம் அல்ல சகலவிதமான சமூக பொருளாதார பின்னணிகளைக் கொண்ட பிள்ளைகளும் மேற்படி கற்றல் இடர்பாடுகளை நீண்டகாலமாக அனுபவித்து வந்தபோதும் அவற்றை நிவர்த்தி செய்து கற்றலில் ஈடுபடுத்துவது எமது ஆசிரியர்களுக்கு பிரச்சினையாகவே உள்ளது.

கற்றல் இடர்பாடுகள் கவனம், ஞாபகம், புரிந்துகொள்ளல், மொழி தொடர்பான மூளையின் பிரதேசங்களில் ஏற்படும் பாதிப்பு காரணமாகவே எழுகின்றன. இத்தகைய பாதிப்புக்களை பெற்றோரோ ஆசிரியரோ ஏன் வைத்தியர்கள்கூட இலகுவாகக் கண்டு கொள்வதில்லை. எனவே இல்குவாகக் கண்ணுக்குப் புலப்படக்கூடிய கற்றல் இடர்பாடுகள்

தொடர்பான சமிக்சைகள் இல்லை என்றே கூறவேண்டும். இதனாலேயே கற்றல் குறைபாடுகள் கண்ணுக்குப் புலப்படாதவையாக உள்ளன. ஆனால் உண்மையில் இப்பிரச்சினைகள் குறிப்பிட்ட ஒரு மாணவனை ஏனையோரைப் போல் கற்றலில் ஈடுபடவிடாமல் தடுக்கின்றன. மாணவரின் கற்றல் இடர்பாடுகளுக்கான காரணங்களை நான்காக வகுக்கலாம்.

- ஆசிரியரால் வகுப்பறையில் பயன்படுத்தப்படும் வினைத்திறனற்ற கற்பித்தல் முறைகள்
- பிள்ளைகள் மீது பற்றின்மை - இப்பற்றின்மையானது பிள்ளை பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் நிலையில் கற்றல் இடர்பாடுகளுக்கான அரிதானதொரு காரணமாக அமையினும் தொடர்ச்சியான தோல்விகள் காரணமாக இடர்பாடுகளை மேலும் அதிகரிக்க செய்யும்
- பரம்பரை - பரம்பரையானது கற்றல் இடர்பாடுகளில் பங்கு வகிக்கும் காரணியாக அமையினும் ஓர் பொதுவான நம்பிக்கையின் படி ஒரு பிள்ளையின் 40 - 70 வீதமான மாற்றப்பட முடியாத நிறமூர்த்தங்களின் மேல் பழியைப்போடாவிடின் கற்றலின் ஊடாகப் பெறப்படும் மாற்றப்படக்கூடிய திறன்களை விருத்தி செய்ய உதவுவதன் ஊடாக மேலும் நிறைவு காண முடியும்.
- கற்றல்திறன் விருத்தியின்மை - எல்லாப் பிள்ளைகளிடத்தும் ஏதோவொரு குறிப்பிட்ட கற்றல்திறன் பிரச்சினைகள் உண்டு உதாரணமாக சொற்களை கற்குமிடத்து ஒரே எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்கூட்டத்தை தெரிவு செய்யும் முறையை மாணவன் பின்பற்றுகிறான் ஆனால் கற்றலில் இடர்பாடுகளை உடைய பிள்ளைகளிடத்தே இத்தகைய திறன்கள் குறைவாகவே காணப்படும் ஒரு ஆசிரியர் என்ற வகையில் கற்றல் இடர்பாடுகளுக்கான காரணங்கள் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? சிலவற்றை நாம் இப்போது பார்க்கலாம்.
- ஒரு பிள்ளையின் பிறப்புக்கு முன்னைய காரணங்கள் - உதாரணமாக கர்ப்ப காலத்தில் ஒரு தாய் பயன்படுத்தும் மருந்து வகைகள், தாய்க்கு ஏற்படும் தொற்று நோய்கள், கடுமையான காய்ச்சல் போன்ற காரணங்களால் சிசுவின் மூளை வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

❖ கற்றல் இடர்பாடுகள் குடும்பம் சார்ந்ததாகவும் காணப்படும் ஒரு குடும்பத்தில் ஒருவரில் காணப்படும் இடர்பாடுகள் அதே குடும்பத்தைச்சார்ந்த ஏனையோரிடமும் காணப்படுவது புதுமையான விடயமல்ல

❖ ஒரு குழந்தை பிறக்கும் போது ஏற்படும் பிரச்சினைகள் கற்றல் இடர்பாடுகளுக்குக் காரணமாக அமையலாம். உதாரணமாக ஒரு குழந்தை பிறக்கும் போதோ வாய்விட்டு அழாத நிலையிலோ போதியளவு பிராணவாயு கிடைக்காதுவிடல்

❖ சிலவேளை குழந்தைப் பருவத்து நோய்கள் மூளைக்காய்ச்சல் , செங்கண்மாரி, நெருப்புக் காய்ச்சல் காரணமாகவும் கற்றல் இடர்பாடுகள் ஏற்படலாம்.

❖ முன்பள்ளி,பாடசாலைகளில் முறையான பயிற்சிகளைப் பெறாமை

கற்றல் இடர்பாடுகளை உடைய பிள்ளைகளிடையே காணப்படும் பிரதான பண்பு யாதெனில் அவர்களின் உண்மையான வளர்ச்சி மட்டத்திற்கும் எதிர்பார்த்த வளர்ச்சி மட்டத்திற்கும் இடையே காணப்படும் குறிப்பிடதக்க இடைவெளியாகும் அதாவது ஒரு குறிப்பிட்ட வகுப்பறையில் உள்ள ஒரு சில மாணவர்கள் செய்யவேண்டியதற்கும் அவர்கள் நடைமுறையில் செய்து முடித்தற்குமான வித்தியாசத்தை ஒரு ஆசிரியர் அவதானிக்க முடியும். இவ்வித்தியாசமானது ஆரம்ப வகுப்புக்களில் குறைவாகவும் வகுப்புக்கள் அதிகரிக்க அதிகரிக்க படிப்படியாக கூடிக்கொண்டு செல்வதையும் காணலாம்.

**மகிழ்ச்சியான கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.**

இந்த விசேட கல்விச் சிறார்களுக்கு வாழ்வதற்கான உரிமையும் மகிழ்ச்சிகரமாகக் கற்பதற்கான உரிமைகளையும் அனுபவிக்கும் சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனப் படுத்தியுள்ளது. 1981 ஆம் ஆண்டு சர்வதேச அங்கவீனர் ஆண்டுப் பிரகடனப்படி இவர்களுக்கான அனைத்து உரிமைகளைப் பெறும் பிரகடனம் வெளியிடப்பட்டது. 1994 ஆம் ஆண்டு ( Special Need Education Salamanca Spain) சலமன்கா மாநாட்டு பிரகடனப்படி இந்த

விசேட தேவை பிள்ளைகளுக்கு மனித உரிமைகள், கல்வி உரிமைகள், பாகுபாடின்றி வழங்குதல், பல்வேறு வாய்ப்புக்களை இவர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்தல் உள்ளடக்கல் கல்வியை முழுமையாக இவர்களுக்கு பெற்றுக்கொடுத்து அவர்களின் மகிழ்ச்சிகரமான கல்விக்கும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்கும் ஒவ்வொரு நாட்டு அரசுகளும் தம்மையே அர்ப்பணித்துச் செயலாற்ற வேண்டும் எனப்பரிந்துரை செய்யப்படுகின்றது. இதன் அடிப்படையிலும் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விசேட கல்வி நூற்றாண்டு தின செயல்திட்டத்தினூடாகவும் பின்வரும் நடைமுறைகளை நாமனை வரும் இணைந்த விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

❖ சமுகமட்டத்திலும் கிராம மட்டத்திலும் விசேட தேவையுடைய வர்களைத் தகுதிப் பிரமாணங்களுக்கு அமைய இனங்காணுதல்

❖ அவர்களுக்கான உதவிகள் பாடசாலைகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுதல்.

❖ மருத்துவ ஆலோசனைகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். வைத்தியசாலைகளுடன் உயிர்த்துடிப்பான தொடர்புகளைபேண வழிகாட்டல்.

❖ இவர்களது ஏனைய உரிமைகளையும் சலுகைகளையும் முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக்கொடுத்தல்.

❖ பரிகார நடவடிக்கைகள் மனப்பாங்குரீதியான வலுவூட்டல்களை வழங்குதல் ஏனைய மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்களுக்கான இந்த துறைசார்ந்த பயில்வுகளை உணர்வு ரீதியாக வழங்குதல்.

❖ பொதுமக்களுக்கு ஊடகங்களுனூடாக விழிப்புணர்வுகள் ஏற்படுத்துதல் பொது அமைப்புகள் அரசசார்பற்ற நிறவனங்களின் உதவிகளை பெற்றுக்கொடுக்க வழிகாட்டல்.

❖ இவர்களுக்கான நவீன உபகரணங்களைப் பெற்று கொடுத்தல் சர்வதேச விசேட கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.

❖ இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

❖ விசேட தேவையுடையோருக்கு விசேடமாகக் கற்பிக்கும் பாடசாலையைத் தரமுயர்துதல்.

❖ புதிய உட்படுத்தல் கல்வி தொடர்பான பாடநெறிகளை அறிமுகம் செய்தல்.

என்ற வகையில் விசேட கல்வி தேவைப்படும் சிறார்களுக்கு பல்வேறு உதிவிகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த உதவிகளையும் வழிகாட்டல்களையும் தற்போது பல தனியார் அரச பாடசாலைகளும் சில அமைப்புகளும் செய்து வருகின்றன. எமது பிரதேசத்தில் அவர்களின் செயற்பாடு தன்மைகளை மேலும் விஸ்தரிக்க வேண்டியுள்ளது. பாடசாலைகளை தரமுயர்த்த வேண்டியுள்ளது. பெருமளவு இந்த துறை சார்ந்த பௌதீகவளங்கள் தேவையாகவுள்ளன. கல்வி வலய ரீதியாகவேனும் இந்த துறைசார் வள நிலையங்களை முறையாக கசல வசதிகளுடன் அமைக்க வேண்டும். போரினால் அழிவடைந்த நிலையில் இருக்கும் வடகிழக்குப் பிரதேசத்தில் விசேட தேவையுடையோர் தொகை பெருமளவு உள்ளது. அவர்களுக்கான தேவைகள் மிக மிக அதிகமாக உள்ளது என்பதைப் பல ஆய்வுகள் வெளிக்காட்டியுள்ளன. ஆனாலும் இந்த துறை சார்ந்த விழிப்புணர்வு எல்லா மட்டங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டிய நிலையிலே உள்ளது.

**த.ஸ்ரீகமலநாதன்**
ஆசிரியர்,
யா/மானிப்பாய் மெமோறியல் பாடசாலை,
ஆற்றுப்படுத்துனர் : அகவொளி.

## அமெரிக்கப் பழமொழிகள்


❖ தங்கத்திற்குச் சோதனை நெருப்பு, பெண்ணுக்கு சோதனை தங்கம், மனிதனுக்கு சோதனை பெண்.

❖ இரவு உணவைக் குறைத்தால் ஆயுள் நீடிக்கும்.

## அரேபியப் பழமொழிகள்

❖ இலைகள் அதிகமாக இருந்தால் கனிகள் குறைவாக இருக்கும்.

❖ அறிவாளிகளின் ஒருநாள் வாழ்வு; முட்டாள்களின் முழு வாழ்வுக்குச் சமன்.




**ஆசிரியர்** : இந்தக்கதையிலே தலைப்பும் புரியலே வாலும் புரியலே..... இதையா பிரசுரம் பண்ணச் சொல்றீங்க?

**எழுத்தாளர்** : ஹி....ஹி..... தலையையும், வாலையும் வாசகர்களையே கண்டுபிடிக்கச் சொல்லி போட்டி வையுங்களேன்.

இந்த இரண்டு ஜாதகங்களுமே உங்களுக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கு, முதல்ல ஒருத்தரைக் கட்டிக்கோங்க...... விவாகரத்து முடிஞ்சதும் அடுத்த ஆளைக் கட்டிக்கிடலாம்.

பரீட்சையில் எல்லாக் கேள்விகளுமே சுலோபமாகத்தானே இருந்திச்சு. நீ ஏன் சரியா எழுதலை?

நான் கஷ்டமான கேள்விகளை மட்டும்தான் படிச்சுட்டுப் போயிருந்தேன்.

என் பேரைச் சொல்லி என் சிநேகிதன்கிட்டே யாரோ ஒருத்தன் இருநூறு ரூபாய் வாங்கிட்டுப் போயிட்டான். ஆச்சரியமாக இருக்கே, உங்க பேரைச் சொன்ன பிறகுமா அவர் பணம் கொடுத்தார்.

அன்புள்ள அப்பா அறிவது...

காணாமல் போன என்னைப் பற்றித் தகவல் தருபவருக்கு பத்தாயிரம் சன்மானம்மா தரப்படும் என்று அறிவித்திருந்தீங்கள். அதை என்கிட்டத் தருவதாக இருந்தால் நானே புறப்பட்டு வந்துவிடுகிறேன்.

நன்றி

வயிறுகுலுங்கச் சிரியுங்கள்

# திருச்சபையும் அதில் நமது பங்கும்

**சபை என்பது ஓர் குடும்பம் :-** எனவே நாம் ஒருவரோடு ஒருவர் நம்பிக்கையோடு வாழ வேண்டும்.

**சபை என்பது ஐக்கியம் :-** எனவே நாம் சில ஐக்கியங்களையும் நன்மைகளையும் மற்றவரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**சபை என்பது ஓர் உடல் :-** பலவீனமானவருக்கு கரிசனையுடன் உதவுதல் வேண்டும்.

**சபை என்பது ஓர் கட்டிடம் :-** எனவே இங்குள்ளவர்கள் எவரையும் அசட்டை பண்ணாமல் இருத்தல் வேண்டும்.

**சபை என்பது ஓர் பாடசாலை :-** எனவே பரிசுத்தவான்கள் கூடிவருதலை அசட்டை செய்யாமலும் இருத்தல் வேண்டும்.

**சபை என்பது ஓர் மந்தை :-** எனவே அங்கு வசிப்போர் கிறிஸ்துவை அறியும் அறிவில் புத்துணர்ச்சியுடன் இருத்தல் வேண்டும்.

**சபை என்பது ஓர் இல்லம் :-** எனவே அங்கு வசிப்போர் கிறிஸ்துவை அறியும் அறிவில் புத்துணர்ச்சியுடன் இருத்தல் வேண்டும்.

**சபை என்பது ஓர் பண்ணை :-** எனவே அருள் மாரியை அதிகம் பெற்று அனுபவித்து மற்றவர்களுக்கு அதிக கனிகளை கொடுக்க வேண்டும்.

**சபை என்பது ஓர் படை :-** எனவே நாம் பிசாசின் பிடியில் இருந்து மக்களை விடுவிக்க ஜெபத்தோடும் ஒற்றுமையோடும் முன்செல்ல வேண்டும்.

**சபை என்பது ஓர் விளக்கு :-** எனவே நாம் கிறிஸ்துவை பின்பற்றும் வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களுக்கு ஒளி கொடுத்தல் வேண்டும்.

**சி.மயூரன்**
விஞ்ஞானப்பிரிவு
திரு/இராமகிருஷ்ண மிசன் மகா.வித்தி.

# வலுவும்,வாழ்வும் இழந்தோருக்கு ஒளியேற்றுவோம்

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த சமூகத்தில் பல்வேறுபட்ட வலுவிழந்தோர் தொகை அதிகரித்து வருகின்றது. பச்சிளம் பாலகர்களிலிருந்து வயது முதிர்ந்தோர்கள் வரை வயது வித்தியாசமின்றி வலுவிழந்தோர் பலர் இச் சமூகத்தில் வாழ்கின்றார்கள். இவ்வாறு வலுவிழந்தோர் வீடுகளில் முடங்கி இருந்து பிறருக்கும் சுமையாக இருக்கும் நிலை இப்போது மாறி வருகின்றது.

இவ்வாறு வலுவிழந்தோர் வாழ்வில் ஒளியேற்றி அவர்களது வாழ்வை மலர்விக்க வேண்டும். யுத்ததினாலும் வேறு பல காரணங்களி னாலும், அங்கவீனர்களாகியும் வீடுகளில் முடங்கி செய்வதறியாது வருந்துவோருடைய வாழ்வில் ஒளியேற்றி அவர்களை மாற்றுவலுவுள்ள வர்களாக மாற்ற வேண்டும்.

எமது சமூகத்தில் பல வலுவிழந்தோரை இனம் கண்டு வெளிக்கள நிறுவ னங்கள் அவர்களுக்காக பல சேவைகளைச் செய்து வருகின்றது. பிறப்பினாலும், பல்வேறுபட்ட நோய் காரணிகளாலும் பாதிக்கப்பட்ட இந்த வலுவும், வாழ்வும் இழந்த சகோதரர்களுக்கு அவர்களின் நடமாட்டத் திற்கு தேவையான பல்வேறுபட்ட உபகரணங்களை நிறுவனங்கள் முன்னின்று வழங்கி வருகின்றது. அவர்கள் இவ் உபகரணங்களை பயன்படுத்தி சுயமாக சமூகத்தில் உலாவி தமது தேவைகளை பூர்த்தி செய்கிறார்கள்.

இது மட்டுமன்றி விசேட தேவையுடையோர் நடமாடுவதற்கு தேவையான முச்சக்கர வண்டிகள், இருசக்கர இருக்கைகள் ஊன்று கோல்கள், நடைதாங்கிகள் என்பவற்றை தேவைக்கேற்ற அளவுகளில் தயாரித்து வழங்கி வருகிறார்கள். இவ் உபகரணங்களால் வலுவிழந்தவர்கள் வீடுகளில் முடங்கி இருக்கும் நிலையில் இருந்து விடுபட்டு அவர்களது வாழ்வில் புதிய அத்தியாயம் ஒன்று பிறக்கின்றது.

எனவே சமூகத்திலுள்ள வலுவிழந்த எமது சகோதரரை மாற்று வலுவுள்ளோர்கள் ஆக்கி அவர்களது வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைத்து அவர்களது வாழ்வை மலர்விக்க வேண்டும்.

**உ. சிம்ரா**
தரம் -9
அஞ்சலியகம்.

# மகிழ்ச்சிக்கான வழி

மனிதன் புனிதனாக
மனிதம் புனிதமாக
நேசித்திடு மகிழ்வு தனை
உள்ளத்தில் உள்ளதை
உள்ளவாறு உரைப்பது உவகை.

சந்தோச வாழ்வு தனில்
சங்கடங்கள் நிழலாய் வருமே
இன்பம் என்ற ஒற்றை வீட்டுடன்
துன்பம் என்ற ஒற்றை வீடும்
இணைந்து வருமே - இது
இறைவன் தந்த வீடுகள்
இன்பதுன்பம் சுழலும் சக்கரம்.

மகிழ்ச்சிக்கான வழி
மாண்புடன் வாழ்வதே
மனித நேயத்துடன் இருந்திடு
இன்னாருக்கு உதவிடு
இன் சொற்கள் பேசிடு

இதயக்கட்டை அவிழ்த்திடு
இறைதனை நினைந்திடு

கவலையின்றி ஒன்றுபட
கரங்களை ஒன்றுசேர்
மகிழ்வழிதனை தேடு
சோகத்தில் தவிர்த்திடு
சோலை எழில் இரசித்திடு
இரசனை மிகுந்த உள்ளம்
உண்மையில் பூரிக்கும்
இனியதை கற்றுத்தரும்
புரியாத ப்ரியம் பிரியும்
போது புரிவதே களிப்பு தந்த இனிது.

பற்றும் பரிதவிப்பும் பாசமும்
பாங்குடனே பரிட்சயமாக
களிப்புடன் கண்ணாயிரு
மகிழ்ச்சி ஓர் மகோன்னதம்
உவகை உன்னதச் செல்வம்.

**விது. பவித்திரா**
தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.

❖ மனிதனே உயிரினங்களுக்குள் சிறந்தவன். அந்த சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத்திறன். அதை முழுவதும் வளர்த்துக்கொள்வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்கான திறவுகோலாகும்.

❖ பயம் உன்னை கோழையாக்கிவிடும். உன்னிடம் உறவு கொள்ள எவரும் வர மாட்டார்கள்.

-அரிஸ்ரோட்டல்-

# அறிந்து கொள்ளுங்கள்

01. சக்தியை அளவிடப் பயன்படும் அலகு - யூல்
02. மளமளப்பான தசை காணப்படுமிடம் - சிறுநீரகம்
03. அணு ஒன்றில் காணப்படும் மறை அயன் - இலத்திரன்
04. தாவரக் கலமொன்றை முதலில் இனங்கண்டவர் - றொபர்ட்க்
05. வேகத்தின் அலகு - $ms^{-1}/kmh^{-1}$
06. செயற்கை மழையை பெய்விக்க காரணமான வாயு- காபனீரொட்சைட்
07. ஆவர்த்தன அட்டவணையைக் கண்டுபிடித்தவர் - மெண்டலீவ்
08. குருதி சம்பந்தமன பரம்பரை நோய் - குருதிப்புற்றுநோய்
09. இதயத்தில் உள்ள அறைகளின் எண்ணிக்கை - நான்கு (4)
10. கறியுப்பு தயாரிக்கப் பயன்படும் மூலகம் - சோடியம்
11. வன்கூட்டுத் தசையின் வகைகள் - இருதலைத்தசை / முத்தலைத்தசை
12. நரம்பு இழையத்தின் பிரதான அலகு - நியுரோன்
13. இயற்கை சக்தி முதல் - சூரியன்
14. நிலக்கீழ் தண்டில் உணவு சேமிக்கும் தாவரம் - இஞ்சி
15. ஆர்முடுகலது சர்வதேச அலகு - $ms^{-2}$
16. வளிமண்டலத்தில் அதிகம் காணப்படும் வாயு - நைதரசன்
17. மின்னேர் இயல்பு கூடிய மூலகம் - பொற்றாசியம்
18. விற்றமின் B இரும்பு குறைபாட்டு நோய் - குருதிச்சோகை
19. இதயத்திற்கு குருதியை வழங்கும் நாடி - முடியுரு நாடி
20. பூச்சியத்தை கண்டுபிடித்த நாடு - இந்தியா

நே. வித்தியாசாகர்
தரம் - $8^C$
கிளி/கிளிநொச்சி ம.வி,
கிளிநொச்சி.



# வாசகர் பார்வை

"மனித வாழ்வின் உச்சமாகவும் உயர்ந்த இலக்காகவும் அமைவது மகிழ்ச்சி. இதனை எமக்குள்ளேயே தொலைத்துவிட்டு வெளியே தேடிக்கொண்டிருக்கின்றோம்." என்ற சாராம்சத்துடன் அருட்தந்தை சூ. டேமியன் அடிகளாரின் செய்தி பிரகாசிக்கத் தொடங்குகின்றது.

பிறருடன் பழகும்போது அவர்களிடம் கண்டு கொண்ட பிடிக்காத குணாதிசயங்களை நாம் கொண்டிராது இருந்தால் அதுவே எம்மையும் பிறரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிடும். அன்பு, அகிம்சை, காருண்யம், நட்பு, மனிதநேயம் என்று பல இன்னோரன்ன அம்சங்களைப் பின்பற்றி மானிடவாழ்வு நகருமானால் மகிழ்வு என்பது எல்லோர் உள்ளங்களிலும் நிரம்பி வழியும் என்பது கண்கூடு. அந்த மகிழ்விற்கான தேடலாக அமைகிறது அஞ்சலி என்கின்ற உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை.

இன்றைய கால இளைஞர் யுவதிகள் பலர் தமது பிரச்சினைகளுக்கு சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாதவர்களாக தமது ஆயுட் காலத்தின் எல்லையை தாமே தீர்மானித்துக் கொள்கிறார்கள். அந்த வகையில் அருட்தந்தை இராசேந்திரம்.ஸ்ரலின் அடிகளார் அவர்கள் எழுதிய கட்டுரை காலத்தின் தேவை கருதியது. இலக்கியங்கள் மனிதமனங்களைச் செம்மைப்படுத்துவது. சோழர் கால இலக்கியப்பண்பு அதனைப் பரப்பி நிற்கின்றது.

சஞ்சிகைகளுக்கு மகுடம் போல அமைகின்றன சிறுகதைகள். "தாவீது அடிகளும் அவர் வாழ்ந்த இலங்கையும்" என்ற தும்பை மண்வாசனை கமழும் கட்டுரை சுடரில் ஒளி வீசுவது அஞ்சலிக்கு மேலும் மெருகூட்டுகின்றது. நவீன தகவல் தொடர்பாடல் உலகிற்கு பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவ பரம்பரை ஒன்றை உருவாக்கும் முகமாக அவர்களது பலவிதமான ஆக்கங்கள் சுடரை அலங்கரிப்பது பாராட்டுதற்குரியது. இது தவிர உங்களுடன் கொஞ்சநேரம் பொது அறிவுப்போட்டி என்பன மாணவர்களது சுயஆற்றல்களை திறன்களை வெளிக்கொணர்வதுடன் தேடலிற்கான ஒரு முயற்சியாகவும் அமைகின்றது.

மாணவர்கள், இளைஞர்கள் என்று அவர்களை மையப்படுத்தி தீபம் பிரகாசித்தாலும் பெரியவர்களும் சிந்திக்க தூண்டுகின்றது. அத்துடன் இச்சுடரின் ஒளிப்பிரவாகம் யாழ் மாவட்டத்தில் மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களிலும் சுடர் விட்டு பிரகாசிப்பது மேலும் சிறப்பைத் தருகின்றது.

சுடரின் வாசகர் என்ற ரீதியில் பொதுஅறிவு வினாக்களின் தொகையை பத்தாக மாற்றி அமைத்தால் மாணவர்களின் தேடலை அதிகரிக்கச் செய்வதுடன் அறிவார்ந்த சமுதாயம் ஒன்றையும் கட்டிஎழுப்பலாம் என்பது எனது அபிப்பிராயம். மேலும் சரியான விடையளிக்கும் மாணவர்களுக்கு பாராட்டுடன் பரிசுப்பொருளும் வழங்கினால் அதில் பங்குபற்றும் மாணவர்களின் தொகை அதிகரித்து தங்களது அஞ்சலி மேலும் சுடர் விட்டு பிரகாசிக்கும் என்பது திண்ணம்.

திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்
ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்)
வடமராட்சி

**நீங்களும் வளர்ந்து அஞ்சலியை வளர்த்து மற்றவர்களை வளர்க்க உளவியல், ஆன்மீக, இலக்கிய, சமூக ஆக்கங்களையும், இச் சஞ்சிகை பற்றிய கருத்துக்களையும் எழுதி அனுப்புங்கள்.**

**உங்களது ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

| | |
|---|---|
| **அஞ்சலியகம்,** | **Anjali Aham,** |
| **நெல்லண்டை வீதி,** | **Nellandai Road,** |
| **தும்பளை,** | **Thumpalai,** |
| **பருத்தித்துறை.** | **Point Pedro,** |

**பொது அறிவிற்குரிய விடைகளை இணைக்கப்பட்டுள்ள தாளில் எழுதி அனுப்புங்கள்**

**(நிழற் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

| | |
|---|---|
| அஞ்சலியகம்,<br>நெல்லண்டை வீதி,<br>தும்பளை,<br>பருத்தித்துறை. | Anjali Aham,<br>Nellandai Road,<br>Thumpalai,<br>Point Pedro, |

**தீபம் 5 சுடர் - 02 சஞ்சிகைக்கான விடைகள்**

1) என்றும் ஒளிரும் திரியாக 2) கரப்பான் பூச்சி 3) ஸ்புட்நிக்
4) 2100 கோடி 5) இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்தியதீவுகள்

## சுடர் - 03 சஞ்சிகைக்கான பொது அறிவுப்போட்டி

01) தீபம் 05, சுடர் 02 இல் "மகிழ்வுடன் வாழ" என்ற ஆக்கத்தில் மகிழ்வுடன் வாழ எத்தனை வழிகள் கூறப்பட்டுள்ளன?

02) ஒரு நிமிடத்திற்கு எத்தனை முறைகள் நாம் கண் சிமிட்டுகின்றோம்?

03) ஆரம்பப் பள்ளிகள் அதிகம் உள்ள நாடு எது?

04) ஆட்சி மாற்றம் இல்லாத ஒரே நாடு எது?

05) கறையான்கள் அரிக்காத ஒரே மரம் எது?

### 5 வினாக்களில் 4 வினாக்களிற்கு சரியான விடைகளை எழுதிப் பாராட்டினைப் பெறும் மாணவ, மாணவிகள்

1) S.அனோமா - தரம் 12A - தி.கோ / இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயம்
2) S.கௌசல்யா - தரம் 8A - தி.கோ / இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயம்
3) தா.ருக்சிக்கா - தரம் 8 - தி.கோ / இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயம்
4) றெ.சகாயதர்சன் லெம்பட் - புனித வளனார் அ.ம.தி.சிறிய குருமடம்
5) பே.தமிழ்ச்செல்வி - தரம் 12A - இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
6) M.கிறிஸ்ஷானி - தரம் 8A - இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
7) M.செர்மியா டிலிமா - தரம் 10 - இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

## அஞ்சலியகத்தின் பணிகளின் பதிவுகள் சில......



















PRINTED BY S.P.M. PRINTERS, V.M. ROAD, POINT PEDRO. TEL: 077 4966997